Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்
முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி– 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 சஃபான் 03 (08.09.2005) வியாழக்கிழமை இதழ்:343

## இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து அரசியல் போராளிகள் வெளியேற்றம்!

கிளிநொச்சி —

நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டுவந்த போராளிகள், தொடர்ச்சியாக படுகொலை செய்யப்படும் சம்பவங்களை அடுத்து, தமிழீழத் தேசியத் தலைவரின் விசேட பணிப்பின் பேரில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து அரசியற்துறைப் போராளிகள் அனைவரும் நேற்று வெளியேறினர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைவாக, நிராயுதபாணிகளாக அரசியல் பணியாற்றும் போராளிகளைக் குறிவைத்து அரச படையினரும், அவர்களின் துணையுடன் இயங்கும் ஆயுதக்குழுவினரும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்துறை அலுவலகங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவ்வாறான படையினரின் தாக்குதல்களில் கடந்த வாரம் 5 புலிகள் கொல்லப்பட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்பாட்டை படைத்தரப்பு நெருக்கடி நிலைக்குத் தள்ளியிருக்கிறது!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி —

போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலையை அரச படைத்தரப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால், போர்நிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் ஆசிய ஒளிபரப்புச் சேவைக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேலும் கூறியிருப்பதாவது -

அண்மைக்காலமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எமது போராளிகள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள்.

முழுக்க முழுக்கவே அரச படைத்தரப்பினுடைய ஒழுங்கமைப்பின் கீழ் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதை நாம் ஆதாரத்துடன் பலமுறை கண்காணிப்புக்குழு ஊடாக சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஆனால், அவர்கள் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. இன்னும் இன்னும் எமது போராளிகள் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்திக் கொண்டே போகிறார்கள். (11 ஆம் பக்கம் பார்க்க)

## அனுசரணையாளர் பாத்திரத்தை ஐ.நா. வகிக்கும் திட்டம் இல்லை!



### அனானின் விசேட பிரதிநிதி

கொழும்பு —

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் அனுசரணை

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் அரசு- விடுதலைப் புலிகள் சந்திப்பு!

### நோர்வே அரசு பரிந்துரை

ஒஸ்லோ —

சந்திப்புக்கு ஒழுங்கு செய்து தருமாறு இலங்கை

# அனுசரணையாளர் பாத்திரத்தை ஐ.நா. வகிக்கும் திட்டம் இல்லை!



## அனானின் விசேட பிரதிநிதி

கொழும்பு —

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் அனுசரணையாளர் பதவியை வகிக்கும் நோர்வேயை விலக்கி, ஐ.நா.சபை அந்தப் பதவியை வகிப்பதற்கான திட்டம் எதுவும் இல்லையென - நான்கு நாட்கள் விஜயமாக கொழும்பு வந்த ஐ.நாவின் விசேட பிரதிநிதி லக்டர் பிராமி தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள சூழலை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா - ஐ.நா. செயலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் அரசு- விடுதலைப் புலிகள் சந்திப்பு!

## நோர்வே அரசு பரிந்துரை

ஒஸ்லோ —

போர் நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை - கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடத்துவதற்கு பரிந்துரை செய்திருப்பதாக நோர்வே அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

றோயல் நோர்வேஜியன் அரசாங்கத்தின் சார் பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் -

போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாக அவசர சந்திப்புக்கு ஒழுங்கு செய்து தருமாறு இலங்கை அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க இரு தரப்பினருடனும் நோர்வே அரசு கலந்துரையாடியது.

இதனடிப்படையில் புலிகளும் சந்திப்புக்கு இணக்கம் தெரிவித்தனர். இலங்கைத் தீவுக்குள்ளேயே பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசு கூறியது.

புலிகள் தரப்பு கிளிநொச்சியில் அல்லது வெளிநாட்டில் பேச்சு நடத்தப்படவேண்டும் எனக் கூறியது.

இந்த நிலையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு சின்ன ஊறணியில் நேற்று மாலை இடம்பெற்ற கைக்குண்டுவீச்சுச் சம்பவத்தையடுத்து படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சின்ன ஊறணியில் - இராணுவக் காவலரண் ஒன்றின்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் கைக்குண்டு ஒன்றை வீசினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரில் லொறி மோதி சைக்கிளில் சென்றவர் பலி!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் லொறியுடன் மோதியதில் சைக்கிளில் சென்றவர் அதே இடத்தில் பலியானார்.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரஞ்சோதிநாதர் சதீஸ்குமார் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

ஆரியகுளம் பகுதியிலிருந்து ஸ்ரான்லிவீதி வழியாக சைக்கிளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதுக்குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

கிளிநொச்சி —

நோர்வே தூதுக்குழுவினர் இன்றுகாலை கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இன்றுகாலை 10 மணியளவில் கிளிநொச்சி வரும் நோர்வே (12 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்

# யாழ்.இந்துக் கல்லூரி மாணவனுக்கு கணிதத்தில் தேசிய ரீதியில் முதலிடம்!

யாழ்ப்பாணம் —

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

இந்தப் பெறுபேறுகளின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கணித பிரிவு மாணவன் சிவப்பிரகாசம் மயூரன் அகில இலங்கை ரீதியாக ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற் றுள்ளார்.

இதன்படி நேற்று யாழ். மாவட்டத் தில் சில பாடசாலைகளில் முதற் கட்டமாக கிடைத்த முன்னணிப் பெறுபேறு களின் விபரங்கள் வருமாறு -

(11 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் சூட்டில் 2 இளைஞர்கள் காயம்!

திருகோணமலை —

திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இரு தமிழ் இளைஞர்கள் காயமடைந்தனர்.

தமது காவல் நிலை மீது குறிப்பிட்ட இளைஞர்கள் நேற்றுமுன்தினம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணையில் அபிவிருத்தித் திட்டம்

வேலணை——

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபை பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை மரநடுகை, சிரமதானம், கட்டாக்காலி நாய்களை பிடித்தல், சூழல் நலன் பேணல் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துதல், நடமாடும் மருத்துவசேவை, முன்பள்ளி மாணவர்களுக்கிடையே மெய்வன்மைப் போட்டி, மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டி, பொது அறிவு, கட்டுரைப் போட்டிகள், சனசமூக நிலையங்கள், மயானங்கள் ஆகியவற்றை புனரமைத்தல் போன்ற பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பிரதேசசபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்தார். (91)

## இந்திய மீனவரைக் கட்டுப்படுத்துமாறு வடமராட்சி மீனவ சமாசம் கோரிக்கை

வடமராட்சி——

வடமராட்சி கடலில் சட்டவிரோதமாக அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமராட்சி வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வாரம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக பிரதிநிதிகளைச் சந்தித்து இந்தக் கோரிக்கை விடுத்ததுடன் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் பெருமளவில் மீன்களை பிடித்துச் செல்கின்றனர். இதனால் மீன் வளம் குறையும் அபாயநிலை ஏற்படுகின்றது. அத்துடன் எமது மீனவர்களை அச்சுறுத்தி வலைகளையும் அறுத்துச் செல்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி - இந்திய மீனவர்களின் ஏராளமான படகுகள் வடமராட்சி கடலில் பிரவேசித்ததை நான் நேரில் கண்டேன். இந்த விடயத்தை இலங்கை இந்திய இராணுவ உயர் பீடங்களுக்கு தெரிவித்து உங்கள் நிலைமைகளையும் அவர்களுக்கு எடுத்து விளக்கி உரிய பதிலைத் தருவதற்காக நாம் நடவடிக்கைமேற் கொள்வோம். நீங்கள் சற்று பொறுமைகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சி வடக்கு கடற் தொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன் பொஸ்கோ, சமாச செயலர் க.சூரியகுமாரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (14)

## வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம்——

உயரப்புலம் ஆனைக்கோட்டை புனித அடைக்கல மாதா ஆலய வருடாந்த பெருவிழா இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வருடாந்த பெருவிழாவுக்கான ஆயத்த நவநாட்கள் கடந்தமாதம்30 ஆம் திகதி மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை அருட்தந்தை நேசராஜா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெற்றுவந்தன.

இறுதி நாளான இன்று காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

### நமது ஈழநாடு

### மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

**போட்டிகளுக்கான விதிகள்**

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- ❖ படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- ❖ சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- ❖ கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ❖ படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

**நிபந்தனைகள்**

- ❖ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ❖ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ❖ கட்டுரைகள் ஆகக்குறைந்து 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- ❖ கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி "நமது ஈழநாடு" 267 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை யாழ்.சாலை கிளிநொச்சி.

# ஜனாதிபதி தேர்தலில் ஆதரவை பெறுவதற்கு பிரதான பெரும்பான்மைக் கட்சிகள் முயற்சி!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்



யாழ்ப்பாணம்——

தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் யாவும் பின்தள்ளப்பட்டுவிட்டன. ஜனாதிபதித் தேர்தலே கொழும்பை பொறுத்தவரையில் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. ஜே.வி.பியின் ஆதரவை எப்படி பெறுவது, முஸ்லிம்களின் ஆதரவை எப்படிப் பெறுவது, தமிழர்களின் ஆதரவை எப்படிப் பெறுவது மொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வியூகத்தை அமைப்பதே இன்று ஆளும் கட்சியினதும், எதிர் கட்சியினதும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரெழு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தனதுரையில் -

எமது பிரச்சினையை நாமும் இரண்டாம் கட்டமான பிரச்சினையாக தள்ளிவிட முடியாது. விரைவான நிரந்தரமான தீர்வை நோக்கி நாம் முன்னேற வேண்டும். யுத்தத்துக்கு முழுமையான முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அவ்வாறாயின் இனப்பிரச்சினையின் இன்றைய நிலையையும், தமிழ் மக்களின் இன்றைய நிலையையும் சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் சொல்லியாக வேண்டும். இதன் ஒருபடியாகத்தான் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும், கிளிநொச்சியிலும் தமிழ் எழுச்சி பெருவிழாக்களை நடத்தி அதனூடாக தமிழ் மக்களின் கோரிக்கைகளை பிரகடனப்படுத்தி வருகின்றோம்.

இந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் 30 ஆம் திகதி பொங்கு தமிழ் என்ற பெயரில் தமிழர் எழுச்சி பெருவிழா ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளோம். இப்பெரு விழாவில் இராஜதந்திரிகள் சர்வதேச ஊடகவியலாளர்கள், சிங்கள ஊடகவியலாளர்கள், சிங்கள அரசியல் கட்சிகளின்பிரமுகர்கள் எனப் பலரை அழைக்க இருக்கின்றோம். இவர்களின் முன்னிலையில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலான காலமாக யுத்த நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டும் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை. மக்கள் மீளக் குடியேற முடியவில்லை. இராணுவப் பிரச்சினைகள் மக்கள் மத்தியில் இருந்து அகற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக சபைக்கான ஓர் வரைபை தமிழர் தரப்பு முன்வைத்த பொழுதும் அரசு அது தொடர்பாக பேச முன்வரவில்லை. இறுதியாக சுனாமித் தாக்கத்தின் பின்னர் இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசும் புலிகளும் இணைந்து புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக அரசு கேட்ட எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து ஓர் பொது உடன் படிக்கையில் கைச்சாத்திட்ட போதும் உயர் நீதிமன்றத்தால் அதுவும் முடக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழர்கள் ஆகிய நாம் என்ன செய்ய முடியும். பொது மக்கள், போராளிகளென ஒரு லட்சம் மக்களை இந்தப் போராட்டத்தில் நாம் பலி கொடுத்துள்ளோம். பல தசாப்த காலங்களாக பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின் தள்ளப்பட்டுள்ளோம். கோடிக்கணக்கான பெறுமதி மிக்க சொத்துக்களை நாம் இழந்துள்ளோம். இவை எல்லாம் ஏன் நடந்தன? தமிழ் மக்களின் விடுதலைக்காக, அவர்களின் சுதந்திரத்துக்காக, கௌரவமான வாழ்வுக்காக.

எனவே, அரசின் கையாலாகாத் தனத்தையும், இயலாமையையும், இனப் பிரச்சினைத் தீர்வின் அக்கறையின்மையையும் நாம் சர்வதேச சமூகத்துக்கு சொல்லியாக வேண்டும். தமிழ் மக்களுடன் இணைந்து வாழ சிங்கள மக்கள் தயாராக இல்லை என்பதை நாம் சொல்லியாகவேண்டும். எனவே சர்வதேச சமூகம் எமது சுயநிர்ணய உரிமையை, அதற்கான எமது போரட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதை நாம் அவர்களிடம் கோர வேண்டும். அதுவே சிங்கள அரசாங்கத்துக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுப்பதற்கான வழியாகும். எனவே யுத்தத்தை தவிர்த்து ஏனைய சாத்வீக வழிகளில் எமது போராட்டத்தை தொடர்வதாயின் முழு மக்களின் பங்களிப்பும் அவசியம். சர்வதேச ராஜதந்திரிகள் உட்பட சர்வதேச ஊடகவியலாளர்களும் கலந்துகொள்ளும் இந்த எழுச்சிப் பெருவிழாவில் ஆயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் மக்கள் கலந்து கொள்வதன் மூலமே எமது பலத்தையும் எமது ஆத்மார்த்த மான கோரிக்கைகளையும் அவர் களுக்கு தெளிவுபடுத்த முடியும்.

எனவே தீர்வை நோக்கி நாங்கள் நகர, எமது கௌரவமான கோரிக்கைகளை வென்றெடுத்திட, அதற்கான சர்வதேச ஆதரவை அங்கீகாரத்தை பெற்றிட, இன்னுமோர் யுத்தத்தை தவிர்த்து பேச்சுவார்த்தையூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நீங்களும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் மானிப்பாயில் அபிவிருத்தித் திட்டங்கள்

மானிப்பாய்——

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேச சபையால் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 7 பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை சங்கையன் வாய்க்கால், ஆனைக்கோட்டை சாவக்கட்டு அந்துக்குழி வாய்க்கால், காக்கைதீவு வாய்க்கால், பண்டத்தரிப்பு பிரான்பற்று தம்பித்துரை மயானம், விளான் கிராயடி மயானம், நவாலி ஆரயம்பிட்டி மயானம், எருக்கலம்பிட்டி மயானம் ஆகியன இந்த ஆண்டு மீள் புனரமைப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சண்டிலிப்பாய் கல்வளை சங்கப் பலவு வாய்க்கால், அளவெட்டி தொங்கற்தறை வாய்க்கால் ஆகியன அடுத்த ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்தப் புனரமைப்பு பணிகள் யாவும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (91)

## மனித உரிமைகள்தொடர்பாக இரண்டு நாள் கருத்தமர்வு

ஊர்காவற்றுறை——

மனித உரிமைகள் தொடர்பான இரண்டுநாள் கருத்தமர்வினை மனித உரிமைகள் இல்லம் இந்த மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது.

சிறுவர்கள், பெண்கள் அடிப்படை மனித உரிமைமீறல் தொடர்பான கருத்தமர்வு இடம் பெறவுள்ளது.

இந்த கருத்தமர்வில் கலந்து கொள்ளவுள்ளவர்களின் அழைப்புக் கடிதங்கள் தனிப்பட்ட முறையில் நிறுவனத்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் தொடர்பான வழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக மாற்றத்தை மேற் கொள்ளும் வகையில் இந்த இரு நாள் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக நிறுவன அதிகாரி தெரிவித்தார். (91)

### யாழ்.நகரில்

## வியாபாரிகள் தாக்கப்படுவதைக் கண்டித்து முஸ்லிம்கள் அங்காடிகளை மூடி எதிர்ப்பு!

யாழ்ப்பாணம்——

யாழ்.நகரில் முனீஸ்வரர் ஆலய வீதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் வியாபாரிகள் தாக்கப்படுவதைக் கண்டித்தும், உடனடியாக தமது பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று அங்காடிகளை முடி தமது எதிர்ப்பை முஸ்லிம் வியாபாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.நகரில் வியாபார நடவடிக்கையில். ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் வியாபாரிகள் நீண்ட காலமாக சில நபர்களால் தாக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக தலையிட்டு முஸ்லிம் வியாபாரிகள் தாக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரச்சினைக்கு உடனடியாக தலையிட்டு தமது பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கு யாழ்.முஹம்மதயா ஜும்மா பள்ளி வாசல் நிர்வாக சபையும், யாழ். முஸ்லிம் அங்காடி வியாபாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
கார்த்திக், ரோஜா, கௌசல்யா, விவேக் மற்றும் பலர் நடித்த
சந்தித்த வேளை

நிறைஞ்சனாஸ் சங்கானை
வேணு, ரோஜா, கே.ஆர்.விஜயா, நடித்த
பொட்டு அம்மன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இன்றுமட்டும்
ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
அடுத்த வெளியீடு:-
09.09.2005 முதல்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
சுரேஸ்கோபி, மஞ்சு, விஜய்மேனன், விமல்ராஜ் மற்றும் பலர் நடித்த
பத்ரம்
விரைவில்... சூர்யா, அஸின் கஜினி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
டொல்பி ஒலிநயத்துடன்
விக்ரம், சதா, விவேக் மற்றும் பலர் நடித்த
அந்நியன்

காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

# கதிர்காமர் கொலையின் பின்னர் இந்தியத் தலையீடு அவசியம்!

## ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவிப்பு

கொழும்பு —

முன்னாள்வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட நிலையில் - இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு மிகவும் அவசிமானது என்று இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியும், இலங்கை அரசின் முன்னாள் ஆலோசகருமான ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு நம்பியார் அளித்த பேட்டியில் -

நான் இந்திய அரசு சார்பாக பேசவில்லை. நட்பு நாடுகள் என்ற அடிப்படையில் பொதுவாக சில கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இலங்கைத் தீவின் பிரச்சினைகள் குறித்து அக்கறை கொள்வதற்கு இந்தியாவுக்கு பொறுப்புள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டது விடுதலைப் புலிகளுக்கே பலனளிக்கக் கூடியது.

கதிர்காமர் கொல்லப்பட்ட நிலையில் இந்திய அரசு இலங்கை பிரச்சனையில் தலையிடத்தான் வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# போர் முரசறைந்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ!

## ஜோசப் பரராஜசிங்கம் சாடல்



கொழும்பு —

ஜே.வி.பி முன்வைத்த நிபந்தனைகளுக்கு உடன்பாட்டின் மூலம் சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ போர் முரசறைந்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜே.வி.பியுடனான மஹிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தமானது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எதுவித அக்கறையும் எவருக்குமில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

போர்நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு, பொதுக்கட்டமைப்பு கைவிடுதல் உள்ளிட்ட ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்றிருப்பதன் மூலம் இலங்கைத் தீவில் மஹிந்த ராஜபக்ஷ போர் முரசறைந்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தவில்லை. ஜே.வி.பி ஒரு சிங்கள வெறியர் கட்சி. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தவித தீர்வும் ஏற்படாத வகையில் முடக்கும் செயற்பாடுகளை இதுவரையில் மேற்கொண்டிருந்தது என ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

# துயா சந்தகிரிக்கு முப்படையினர் அணிவகுப்பு



கொழும்பு —

அட்மிரலாக பதவியுயர்வு பெற்ற கூட்டுப்படைத் தளபதி தயா சந்தகிரிக்கு கடந்த திங்களன்று கூட்டுப்படைத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு இடம்பெற்றது.

விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, இராணுவ பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதிலியனகே ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# மஹிந்த - ஜே.வி.பி உடன்பாடு; யுத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு —

ஜே.வி.பியுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையானது 2004 இல் ஜே.வி.பியுடன் ஏற்படுத்திக்கொண்ட சிக்கலைவிட மிக மோசமானதென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பிரதிச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பிரதமருக்கு ஆதரவளிக்க ஜே.வி.பி தீர்மானித்திருப்பது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருபுறம் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தயாரென வெளிநாட்டு ஊடகங்களுக்கு கூறும் பிரதமர், மறுபுறம் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அரசியலமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவேன் என ஜே.வி.பியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அதனை ஒரு கஞ்சிச் சட்டியாக்கியுள்ளார்.

ஜே.வி.பி - பிரதமரை இணங்கச் செய்துள்ள உடன்படிக்கையைப் பார்க்கையில் பொதுமக்கள் மத்தியில் யுத்த பீதி ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து போட்டியிட்ட கடந்த பொதுத் தேர்தலில் அவர்களால் 44 சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற முடியாது போனது. தற்போது ஜே.வி.பி விதித்துள்ள நிபந்தனைகளால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளார்.

பிரதமர் இணங்கிய ஜே.வி.பியின் நிபந்தனைகளில் ஒன்றுகூட நாட்டின் எரியும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதல்ல. எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பியும் இணைந்து பணியாற்றுவதைக் காண ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது. இருதரப்பையும் ஒன்றாகத் தாக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதி அமைச்சரின் மாமனாரை காணவில்லை!

புதுடெல்கி —

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் மாமனார் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தபோது காணாமற்போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போபாலில் இருந்து புதுடெல்கிக்குச் சென்று கொண்டிருந்த 50 பேர் கொண்ட யாத்திரிகர் குழுவில் இடம்பெற்றிருந்த போதே சரத் அமுனுகமவின் 80 வயது மாமனார் காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவருடன் சென்ற அவரது மனைவி, சாஞ்சியிலிருந்து சென்னை ஊடாக இலங்கை வந்து சேர்ந்த பின்னரே இது தொடர்பாக தெரியவந்தது.

இதையடுத்து சரத் அமுனுகம தமது மாமனாரைக் கண்டுபிடிக்க போபாலிலுள்ள பொலிஸாரிடம் தொடர்பு ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

# இந்தியத் தூதரகத்துக்கு புதிய இணையத்தளம்!

கொழும்பு —

இலங்கைக்கான இந்தியத் தூதரகம் புதிய இணையத்தளத்தை தொடங்கியுள்ளது.

இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் இந்த இணையத்தளத்தை தொடங்கிவைத்தார்.

கடவுச்சீட்டு குறித்த விபரங்கள் மற்றும் வர்த்தகம், கலாசாரம், கல்வி சேவைகள் தொடர்பான விபரங்கள் இந்த இணையத்தளத்தில் இடம்பெறுகின்றன.

விசா பெறுவதற்கான விண்ணப்பங்கள் இந்திய கலாசார மைய விண்ணப்பங்கள், தூதரக செய்திக் குறிப்புகள் ஆகியனவும் இதில் இணைக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

இந்தியா குறித்த தகவல்களை அறிய இதர இணையத்தளங்களுக்கான இணைப்புகளும் இந்தத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹொட்டேல் மீது கைக்குண்டு வீச்சு

கொழும்பு —

அனுராதபுரத்திலுள்ள ஹொட்டேலொன்றின் மீது கடந்த திங்கட்கிழமை இரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அனுராதபுரம் பொதுச்சந்தை பகுதியில் உள்ள ஹொட்டேலொன்றுக்கு கடந்த திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் வந்த இனந்தெரியாத சிலர் உரிமையாளரிடம் கப்பம் கேட்டனர்.


கப்பம் தர மறுத்த உரிமையாளருக்கும் குறிப்பிட்ட நபர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து கப்பம் கேட்டு வந்தவர்கள் ஹொட்டேலின் மீது கைக்குண்டை வீசினர்.

இந்தச் சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை. எனினும் ஹொட்டலுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக அனுராதபுரம் பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர்.

# இலங்கை பிரச்சினையில் ஐ.நா தலையிட்டால் விடுதலைப் புலிகள் தனியரசு பெற்றுவிடுவர்!

## ஓமல்பே சோபித தேரர் கூறுகிறார்



கொழும்பு —

இலங்கை இனப் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டால், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கான தனியரசைப் பெற்றுவிடுவார்கள் என்று ஜாதிக ஹெல உறுமய பொதுச்செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

அமைதிப் பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணைப் பணி முற்றிலும் பக்கச்சார்பானது. இருப்பினும் ஐ.நா தலையிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கு வசதியாக அமைந்துவிடும்.

இலங்கையின் அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளை இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு அழைக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையை அமைதிப் பேச்சுக்களில் தலையிட இலங்கை அரசு அழைத்தால், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கான தனியரசு பெறுவதற்கு பங்காற்றுவதாக அமைந்துவிடும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இது குறித்து கருத்துக் கூறும்போது -

ஐக்கிய நாடுகள் சபையை ஜனாதிபதி சந்திரிகா அழைத்துள்ளதன் மூலம் அமைதிப் பேச்சுக்களில் நோர்வே தோல்வியடைந்துவிட்டது என்பது தெரியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை நோர்வே தரப்பினர் ஆதரித்தனர். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுக்கள் குறித்து ஜே.வி.பி கருத்து எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. புதிய ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னரே அது குறித்து பேச இயலும். ஐ.நா தலையீடு குறித்து தற்போது கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறுகையில் - எதிர்கால அமைதிப் பேச்சுக்கள் குறித்து நாம் இப்போது எதுவும் கூறவிரும்பவில்லை. புதிய ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அது குறித்து முடிவுசெய்வோம் என்றார்.

# மேலும் ஆயிரம் எழுதுவினைஞர்கள் நியமனம்


கொழும்பு —

இந்த மாத முடிவுக்குள் மேலும் ஆயிரம் பேரை எழுதுவினைஞர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களை சேர்த்துக் கொள்ளவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இந்த எழுதுவினைஞர்களுக்கு ஆட்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளதாகவும், விரைவில் அந்த நியமனங்கள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# ஆஷஸ் கிண்ண இறுதிப்போட்டியில் இன்று இங்கிலாந்து - அவுஸ்ரேலியா பலப்பரீட்சை!




லண்டன்

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து இடையேயான 5 ஆவதும், கடைசியுமான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று ஓவல் மைதானத்தில் தொடங்கவுள்ளது.

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகள் இடையேயான புகழ்பெற்ற போட்டியான ஆஷஸ் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றுவருகிறது. சாதாரணமாகத் தொடங்கிய இந்த தொடர் பரபரப்பான கட்டத்தை தற்போது எட்டியுள்ளது. இதுவரை 4 ஆட்டங்கள் நடந்துமுடிந்துள்ளன. இதன் முதல் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 239 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.


3 ஆவது டெஸ்ட் போட்டி பலத்த பரபரப்புக்கு மத்தியில் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது. இதனைத் தொடர்ந்து நடந்த 4 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடியது. இந்தத் தொடரில் தற்போது இங்கிலாந்து அணி 2-1 என முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையேயான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று ஓவல் மைதானத்தில் தொடங்குகிறது. இதில் என்ன விசேஷம் என்றால் - போட்டி தொடங்குவதற்கு முன்னதாக அவுஸ்ரேலிய அணி எளிதாகத் தொடரைக் கைப்பற்றும் என்று கூறப்பட்டது. ஆனால் தற்போதைய நிலை அதற்கு நேர்மாறாக உள்ளது.

அவுஸ்ரேலிய அணியை பொறுத்தவரையில் அது ஆட்டம் கண்ட நிலையில் உள்ளது. அவுஸ்ரேலியாவின் துடுப்பாட்ட வரிசை தள்ளாடியபடி உள்ளது. இதற்குக் காரணம் அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்துநின்று ஆடாததே ஆகும்.

காயமடைந்துள்ள முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மக்ரா 5 ஆவது டெஸ்டில் ஆடவில்லை. எனவே, அவருக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் கிளார்க் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியை பொறுத்தவரையில் அந்த அணி வீரர்கள் உற்சாகமாக உள்ளனர். தொடரில் முன்னிலையில் இருப்பதன் அந்த அணியினர் எந்தவிதமான பதட்டமும் இன்றிக் கடைசி டெஸ்ட் போட்டியில் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி வெற்றிபெற முயற்சிப்பர்.



மாறாக அவுஸ்ரேலிய அணியினர் இந்த போட்டியில் வெற்றியை தனதாக்கி 2-2 என்ற கணக்கில் தொடரைச் சமநிலையில் முடிக்க கடுமையாகப் போராடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. மொத்தத்தில் இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சம் இருக்காது என்பது என்னவோ உண்மைதான்.

# ஆஷஸ் இறுதிப் போட்டியில் சைமன் ஜோன்ஸ் இல்லை!

லண்டன்

ஆஷஸ்தொடரின் கடைசிப் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் சைமன் ஜோன்ஸ் இடம்பெறமாட்டார்.

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் நான்கு போட்டிகள் முடிவில் இங்கிலாந்து 2-1 என முன்னிலை வகிக்கிறது. கடைசிப்போட்டி இன்று தொடங்குகிறது.

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ் காயம் காரணமாக இந்தப் போட்டியில் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிவர்ஸ் ஸ்விங் ஸ்பெஷலிஸ்ட் பந்துவீச்சாளராக சைமன் இந்தத் தொடரில் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு பெரும் நெருக்கடி கொடுத்தார். அவர் இல்லாதது இங்கிலாந்துக்கு இழப்பே.

சைமனுக்குப் பதில் ஜேம்ஸ் அண்டர்சன் அல்லது போல் கொலிங்வுட் இருவரில் ஒருவர் வாய்ப்புப் பெறலாம். முதல் நான்கு போட்டிகளிலும் இங்கிலாந்து அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

# ஆறு ஆண்டுகளில் மட்டும் 16 இறுதிப் போட்டிகளில் தோல்வி!

## இந்திய அணியின் பரிதாபம்

மும்பை

கிரிக்கெட் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய அணி ஒவ்வொரு போட்டியிலும் முதலில் தடுமாறினாலும் பின்னர் சுதாரித்துக் கொண்டு முன்னேறிவருவது வழக்கமான ஒன்று. இப்படி முன்னேறி பல தடவை இறுதிப் போட்டிவரை வந்தனர்.

தமக்குத்தான் கோப்பை என்று நினைத்து அவர்கள் கோட்டைவிட்டு நிற்கின்றனர். நேற்றுமுன்தினம் சிம்பாப்வேயில் நடந்த இறுதிப் போட்டியிலும் அதே நிலைதான் ஏற்பட்டுள்ளது.

இறுதிப் போட்டிக்கும் இந்தியாவுக்கு ராசியில்லையோ என்னவோ தெரியவில்லை. 1999 இற்குப்பிறகு கடந்த 6 ஆண்டில் மட்டும் 21 தடவை இறுதிப்போட்டிக்குச் சென்று 16 தடவைகள் தோல்வியைச் சந்தித்துள்ளனர்.

2002 இல் இங்கிலாந்தில் நடந்த முத்தரப்புப் போட்டியில் மட்டும் இந்திய அணி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# சிம்பாப்வே டெஸ்ட் தொடருக்கு இந்திய வீரர்கள் புறப்பட்டனர்!



மும்பை

அனில் கும்ளே, சகீர்கான் உட்பட ஏழு இந்திய வீரர்கள் டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக சிம்பாப்வே புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக, சிம்பாவேக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

முதல் டெஸ்ட் வரும் 13 ஆம் திகதி புலவாயோவிலும், இரண்டாவது டெஸ்ட் 20 ஆம் திகதி ஹராரேயிலும் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக அனில் கும்ளே, சகீர்கான், லக்ஷ்மன், பாலாஜி, தினேஷ் கார்த்திக், கௌதம் கம்பீர் மற்றும் தீராஜ் ஜாதவ் ஆகிய ஏழு இந்திய வீரர்கள் மும்பையில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை சிம்பாப்வே புறப்பட்டனர்

ஹராரே நகரில் இந்திய அணியுடன் இணைந்து இவர்கள் திறமை காட்டுவார்கள். டெஸ்ட் தொடருக்கு முன்னதாக மூன்று நாள் பயிற்சிப் போட்டி இன்று தொடங்கவுள்ளது.

முத்தரப்புத் தொடரில் விளையாடிய அகர்கர், மகேந்திரசிங் டோனி, ஜெப் பிரகாஷ் யாதவ், ருத்ர பிரதாப் சிங், முரளி கார்த்திக், சுரேஷ் ரெய்னா மற்றும் வேணுகோபல் ராவ் ஆகிய ஏழு வீரர்கள் நாடு திரும்புகின்றனர். உடல்நலம் முழுவதும் தேறாத காரணத்தால், டெஸ்ட் தொடரில் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதில் மகாராஷ்டிரா வீரர் தீராஜ் யாதவ் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

# ஆதிசக்தி, றேஞ்சர்ஸ் அணிகள் காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி!

பருத்தித்துறை

ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆதிசக்தி, றேஞ்சர்ஸ் அணிகள் காலிறுதி ஆட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

முதலாட்டத்தில்ஆதிசக்தி அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. ஆட்டம் தொடங்கி முதல் 17 ஆவது நிமிடத்திலே கலைவாணி வீரர் கோல் பிரதேசத்திற்குள் விதிக்குப் புறம்பான விளையாட்டை மேற்கொண்டதால் ஆதிசக்தி அணியினருக்கு தண்டனை உதை ஒன்று வழங்கப்பட்டது.

இதனை அந்த அணியைச் சேர்ந்த குகராசா சிறப்பான முறையில் கோலாக்கினார். அதைத் தொடர்ந்து 19 ஆவது நிமிடத்தில் கலைவாணி கோல்காப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தையும், 21 ஆவது நிமிடத்தில் அடித்த பந்து கோல் கம்பத்தில்பட்டு வெளியேறியும் தமக்கான கோல் சந்தர்ப்பங்களை ஆதிசக்தி அணியினர் இழந்தனர்.

இதேபோல் 20 ஆவது, 23 ஆவது நிமிடங்களில் மிக இலகுவாக கோல் அடிக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் கலைவாணி அணியினர் தவறவிட்டனர்.

இதனால் இடைவேளைக்கு முன்னர் ஆதிசக்தி அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது இடைவேளைக்கு முன்னர் விட்ட சந்தர்ப்பத்தை நிவர்த்திசெய்யும் வகையில் ஆதிசக்தி அணியினர் 3 கோல்களைப் போட்டனர்.

இதில் முதல் 5 ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த சதா தட்டிக்கொடுக்க அருளானந்தத்தினாலும், 11 ஆவது நிமிடத்தில் யோகச்சந்திரன் தனியக்கொண்டுசென்றும், 16 ஆவது நிமிடத்தில் அருளானந்தத்தினாலும் கோல்களைப்போட்டு கலைவாணி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கினர்.

இதற்கிடையில் 7 ஆவது நிமிடத்தில் முறைகேடாக விளையாடியமைக்காக கலைவாணி அணி வீரர் ஒருவருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

ஆட்டமுடிவில் ஆதிசக்தி அணி, கலைவாணி அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண் டது.

இரண்டாவது ஆட்டமாக கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கி 3 ஆவது நிமிடத்திலே கரணவாய் மத்தி அணியின் 4 வீரர்கள் பந்தைக் கொண்டு சென்று 4 தடவைகள் மாறிமாறி அடித்தனர்.

அதனை சற்றும் விட்டுக்கொடுக்காதபடி 4 தடவையும் நிதானமாக றேஞ்சர்ஸ் கோல் காப்பாளர் தடுத்தார். இருந்தபோதும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை உறுதிசெய்யும் நோக்குடன் 4 ஆவது நிமிடத்தில் கரணவாய் மத்திய அணி வீரர் சிவதர்சன் மிகச் சிறந்த கோல் ஒன்றைப் போட்டார்.

அதன்பின்னர் ஆட்டம் விறுவிறுப்படைந்தபோது 20 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் கோல் காப்பாளர் பந்தைப் பிடிப்பதற்காக முன்னேறிய போது அவரையும் வெட்டி அடித்த பந்து வெளியில் சென்றதால் கரணவாய் மத்திய அணியினர் தமக்குரிய வாய்ப்பை நழுவவிட்டனர்.

இதனால் இடைவேளைக்கு முன்னர் கரணவாய் மத்தி அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது முதல் 10 ஆவது நிமிடத்திலேயே கரணவாய் மத்தி அணி வீரர் மிகவும் நேர்த்தியான கோல் ஒன்றை மேலும் போட்டார். அதனைத் தொடர்ந்து 15 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணி வீரர் சுதாகர் (கைலாஸ்) இலகுவான ஒரு கோலைப் போட்டார்.

அதன் பின்னர் றேஞ்சர்ஸ் அணியினர் மிகவும் கஷ்டப்பட்டபோதும் ஆட்டம் முடிவடைவதற்குக் கடைசி மூன்று நிமிடம் இருக்கும்போது றேஞ்சர்ஸ் அணி வீரர் சுதாகர் அடித்த பந்தை கரணவாய் மத்தி அணிவீரர் ஒருவர் தடுக்க முற்பட்டபோது அது அவரின் காலில்பட்டு அவர் பக்கமே கோலாயிற்று.

இதனால் இரு அணிகளும் சம கோல்களைப்பெற்று வெற்றி -தண்டனை உதைமூலம் தீர்மானிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

தண்டனை உதைகள் 5 சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது தமக்கு வழங்கிய 4 சந்தர்ப்பங்களையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி 4 கோல்களை றேஞ்சர்ஸ் அணியினர் போட்டனர்.

இதனால் றேஞ்சர்ஸ் அணி, கரணவாய் மத்தி அணியை 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இதில் சிறந்த ஆட்ட நாயகர்களாக மிக இலகுவான பந்துகளைத் தவறவிட்டும் - மிகக் கஷ்டமான பந்துகளைக் கோலாக்கிய ஆதிசக்தி வீரர் அருளானந்தம், கரணவாய் மத்தியில் சிறந்த கோல்களைப் போட்ட சிவதர்சன் ஆகியோர் ஆட்ட நாயகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (12)

# இலங்கை - தென்னாபிரிக்க அணிகளின் இந்திய பயண விபரங்கள் அறிவிப்பு!

மும்பை

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளின் சுற்றுப் பயண விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் தொடரில் பங்கேற்க இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இந்தியா செல்லவுள்ளன. அடுத்தமாதம் இந்தியா செல்லும் இலங்கை அணி ஏழு ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

அது முடிந்ததும் தென்னாபிரிக்க அணி ஐந்து ஒரு நாள் போட்டிகளில் நவம்பர் மாதம் விளையாடும். தென்னாபிரிக்க அணி தனது முதலாவது போட்டியை சென்னையில் சந்திக்கும். இந்தப்போட்டி நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் நாயர் மும்பையில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

அதன் விபரம் வருமாறு -

இலங்கை - இந்திய தொடர்:

ஒக்.25 - முதல் போட்டி (மொஹாலி), ஒக்.28 - 2 ஆவது போட்டி (நாக்பூர்), ஒக்.31 - 3 ஆவது போட்டி (வதோதரா), நவ.3 -4 ஆவது போட்டி (அகமதாபாத்), நவ.6 - 5 ஆவது போட்டி (ஜெயப்பூர்/ஜோத்பூர்) நவ.9 - 6 ஆவது போட்டி (ராஜ்கோட்), நவ 12-7 ஆவது போட்டி (புனே)

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்




# அரையிறுதியில் கிளிஸ்டர்ஸ், ஷரபோவா: வில்லியம்ஸ் சகோதரிகள் வெளியேற்றம்!



வொஷிங்ரன்

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி பெண்கள் பிரிவில் காலிறுதிப் போட்டியில் உலகின் முதல்தர வீராங்கனையான ரஷ்யாவின் ஷரபோவா, அதே நாட்டு வீராங்கனை நாடியா பெட்ரோவாவைக் கடும் போராட்டத்துக்குப் பிறகு வெற்றிகொண்டார்.

7-5, 4-6, 6-4 என்ற செற்களின் அடிப்படையில் ஷரபோவா அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இன்னொரு பெண்கள் ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், பெல்ஜிய வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸுடன் மோதினார்.

இதில் கிம் கிளிஸ்டர்ஸ் - வீனசை 4-6, 7-5, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற் றார். இதன்மூலம் அவர் அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்றார்.

ஆண்கள் பிரிவில் 4 ஆவது சுற்றுப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) நிகோலஸ் (ஜேர்மனி) ஆகியோர் மோதினர். ரோஜர் பெடரர் 6-4, 6-7, 6-3, 6-4 என்ற செட்களில் வெற்றி பெற்றார்.

இன்னொரு போட்டியில் உலகின் 3 ஆம் நிலைவீரர் ஹெவிட் 6-1, 6-4, 6-2 என்ற செட்களில் சிலோவாக்கிய நாட்டு வீரர் டொம்னிக்கைத் தோற்கடித்தார். மற்றைய போட்டிகளில் டேவிட் நல்பாண்டியன் (ஆர்ஜென்டினா) ஜனர்கோ நிமினன் (பின்லாந்து) ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிப்போட்டிக்கு முன்னேறினர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் மகேஷ் பூபதி சுலோவாக்கியா நாட்டு வீராங்கனை டேனிலாவுடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். இந்த ஜோடி காலிறுதிப் போட்டியில் அல்சுகியமா (ஜப்பான்) கெவின் (சிம்பாப்வே) ஜோடியை 7-5, 6-2 என்ற செட்டில் வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# உலர் உணவுப் பொருள் விநியோகத்தில் விழிப்புடன் செயற்படுதல் வேண்டும் !

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன்



யாழ்ப்பாணம் —

மக்களுக்கான உணவு விநியோகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் விழிப்புடன் செயற்படவேண்டும் என - தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விவசாய நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாச கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற சுகாதாரமும், கூட்டுறவாளர் பங்களிப்பு என்பது தொடர்பாக இடம் பெற்ற கூட்டுறவாளர்களுடனான சுகாதார கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

சுகாதாரம் என்பது உணவு நீர்மற்றும் கழிவகற்றலில் தங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களூடாகவே பெருமளவு உணவுப் பொருட்கள் மக்களைச் சென்றடைகின்றன.

மக்கள் ஆரோக்கியமாக, சுகதேகியாக வாழவேண்டும் எனும் நோக்கோடு, எமது தேசியத் தலைவரின் பணிப்புக்கமைய 1995 ஆம் ஆண்டு தமிழீழ உணவுச் சட்டம் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சுகாதார மேம்பாட்டில் கூட்டுறவாளர்களின் பங்களிப்பு முக்கியமானது.

தென்னிலங்கையிலிருந்து தரமற்ற பொருட்கள் தமிழர் தாயகத்துக்கு கொண்டுவரப்படுகின்றன. பொருட்களின் தரம் தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்களில் விழிப்பு முக்கியமானது.

கூட்டுறவுச்சங்கங்கள் தரமான பொருட்களையே மக்களுக்குக் கொள்வனவு செய்து விநியோகிக்கவேண்டும்.

அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உணவுக்களஞ்சியங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அத்துடன், காலாவதியான பொருட்களை விற்பனை செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

தென்னிலங்கை வர்த்தகர்கள் தமது பொருட்களை விற்பனை செய்யும் இடமாக வட பகுதியைக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணமாகத் தரமற்ற பொருட்கள் வடபகுதிக்குள் கொண்டுவரப்படுகின்றன.

மேலும் சூழல் பாதுகாப்பு முக்கியமானதாக உள்ளது. தனிமனித சிந்தனையும், செயற்பாடும் மிகவும் அவசியமானதாகும்.

சூழல் மாசடைவதற்குப் பொலித்தீன் கழிவுகள் முக்கியமானதாக உள்ளது.

இதன் காரணமாக அழியக்கூடிய பொலித்தீன் வகைகளை உற்பத்தி செய்யும்தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல்கள் - முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் இடம் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கைதடி - நாவற்குழி இரும்புப் பாலங்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரிப்பு

நாவற்குழி —

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட - கைதடி, நாவற்குழி இரும்புப் பாலங்களில் மழை காலங்களில் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம் பெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

மழை பெய்து ஈரமாகவுள்ள சந்தர்ப்பங்களில் மோட்டார் சைக்கிள்களில் வேகமாகச் செல்வோர் பாலத்தில் வைத்து பிறேக் பிரயோகிக்கும் போது, சறுக்கி விழுந்து காயமடையும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இவ்வாறு இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில், மட்டுவிலைச் சேர்ந்த கணவனும், மனைவியும் பலத்த உராய்வுக் காயங்களுக்கு உள்ளாகினர்.

பாலத்தில் போடப்பட்டுள்ள தகடுகள் உராய்வு குறைவாக, அழுத்தமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்தப் பாலத்தின் மீது கொங்கிறீட் அல்லது கல் போட்டு தார் ஊற்றினால் மட்டுமே இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க கூடியதாக இருக்கும். இல்லையேல் வரும் மாரி காலத்தில் பெருமளவு விபத்துச் சம்பவங்கள் இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (24)

# மீளக் குடியமர்த்த வழிசெய்யுமாறு கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர்

வலிகாமம் —

வலிகாமம் வடக்கு பகுதியிருந்து 1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து, நலன்புரி நிலையங்களில் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வரும் தம்மை, மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு அனுமதிக்க வழிசெய்ய வேண்டுமென அந்தப் பகுதியைச் சேர்ந்த 70 குடும்பங்கள் - கண்காணிப்புக் குழுவிடம் கடந்த திங்களன்று மகஜர் ஒன்றைக் கையளித்தன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம்இராணுவத்தினர் எமது பகுதிகளுக்குள் வந்ததால், நாம் வலுக்கட்டாயமாக எமது பகுதிகளிலிருந்து இடப்பெயர்வுக்குள்ளானோம். இந்த இடப்பெயர்வால் நாம் எமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து விட்டோம்.

தற்போது நாம் நலன்புரி நிலையங்களிலேயே வாழ்ந்து வருகிறோம். அங்கு எமக்கான எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லை.

எமது பிள்ளைகளுக் கான கல்வி வசதிகள் இல்லை. நலன்புரி நிலையங்களில் மக்கள் அதிகமாக உள்ளதால் மிகவும் நெருக்கமாக உள்ளது.

எனவே, எமது நிலங்களை ஆக்கிரமித்து உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் நிலை கொண்டுள்ள படையினரை விலக்கி, புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி எம்மை மீளக் குடியமர்த்த ஆவண செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த 26 குடும்பங்களும் நேற்று முன்தினம் கண்காணிப்புக் குழுவிடம் இது போன்ற மகஜரைக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# 68 கடற்தொழிலாளர்களுக்கு மீன் பிடி வலைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட பலாலி, ஊறணி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வளலாய் ஆகிய இடங்களில் இருந்து - 1990 ஆம் ஆண்டில் இராணுவ ஆக்கிரமிப்பால் இடம் பெயர்ந்து, பருத்தித்துறை, பொலிகண்டி, சக்கோட்டைப் பகுதிகளில் வாழும் கடற்தொழிலாளர்களுக்கு 18 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை யாழ்.மாகாண அமலமரித்தியாகிகள் சென்றவாரம் பொலிகண்டியில் வைத்து வழங்கினர்.

1990 ஆம் ஆண்டுகளில் படை நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து, சுனாமி அனர்தத்தத்தால் பாதிக்கப்பட்டு - பருத்தித்துறை, பொலிகண்டி, சக்கோட்டைப் பகுதியில் வாழும் 62 கடற் தொழில் குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அருட்தந்தை போல் நட்சத்திரம், அருட்தந்தை சூசைதாசன் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பண்ணை இயந்திரவியல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் —

விவசாயிகள் பண்ணை இயந்திர உரிமையாளர்கள் மற்றும் இயந்திர இயக்குநர்களது தொழில்நுட்ப வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், விவசாய திணைக்களத்தால் அனுராதபுரத்தில் அமைந்துள்ள பண்ணை இயந்திரவியல் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படவுள்ள பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இங்கு நான்கு சில்லு உழவு இயந்திரம் இயக்குதலும், பராமரித்தலும். இரண்டு சில்லு உழவு இயந்திரம் இயக்குதலும், பராமரித்தலும். நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், தெளிகருவி இயக்குதலும், பராமரித்தலும். நெல் அறுவடை சூடடிக்கும் இயந்திரம் இயக்குதலும், பராமரித்தலும் ஆகிய பயிற்சிகளே வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இயந்திர இயக்குநர்கள் தங்களது விண்ணப்பங்களை பிரதேச விவசாய போதனாசிரியர்களிடமோ அல்லது திருநெல்வேலியில் அமைந்துள்ள உதவி விவசாய பணிப்பாளர் பணிமனைக்கோ 20-09-2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்

பயிற்சிக்கான உணவு, தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படுவதோடு, போக்குவரத்துச் செலவும் வழங்கப்படும் என உதவி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா அறிவித்துள்ளார்.

# பத்தாம் திகதி வரை புரட்டாதி மாத சீசன்

யாழ்ப்பாணம்

பாடசாலை மாணவர்களுக் கான பருவகால சீட்டு, இந்த மாதம் பத்தாம் திகதிவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் கணேசபிள்ளை தெரிவித்தார்.

விடுமுறைக்காலம் முடிவடைந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதால், மாணவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில்- பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி.தங்கராசாவிடமிருந்து, செல்வன் பிரபாகரச்சோழன் பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : பா.நிருஷனா

முகவரி : இத்தாவில், பளை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# தேசிய இளைஞர் மன்ற தகவல் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

தேசிய இளைஞர் சேவைகள் விவகார மன்றத்தின் ஏற்பாட்டில், தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் - பாலியல் துஸ்பிரயோகம், மீள் உற்பத்தி, சுகாதாரம், வம்ச அபிவிருத்தி மற்றும் வம்ச சுகாதாரம் குறித்த தகவல் பயிற்சி - நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தத் தகவல் பயிற்சியில் - யாழ்ப்பாணப் பிரதேசசபை, நல்லூர் பிரதேச சபைகளைச் சேர்ந்த இளைஞர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இந்தத் தகவல் பயிற்சி - சங்கானை, தெல்லிப்பளை, கரவெட்டி, சாவகச்சேரி போன்ற பிரதேசங்களிலும் தொடர்ந்து நடத்தப்படவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# உயர் பாதுகாப்பு வலய விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில், விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விவசாய நிலங்களை முடக்கி வைத்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் வசிக்கும் மக்களுக்கு ஏற்கனவே விசேட அடையாள அட்டை வழங்கப்பட்ட போதும், விவசாயம் செய்பவர்களுக்கு மீண்டும் புதிய விசேட அடையாள அட்டை வழங்க இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## தொழில்

# வியாபாரத்திற்கான படிமுறைக் கொள்வனவில் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள்

வியாபாரத்துக்கான ஆரம்பக் கொள்வனவில் கவனத்திற்கொள்ள வேண்டிய சில விடயங்கள் பற்றி சென்றவாரத்தொடரில் ஆராய்ந் தோம். தற்போது வியாபாரத்தை ஆரம்பித்த பின்பு மேற்கொள்ளப் படும் படிமுறைக் கொள்வனவு பற்றி நோக்குவோம்.

### வியாபார நகர்வுப் போக்கை அவதானித்தல்

படிமுறைக் கொள்வனவு எமக்கு இலாபத்தை ஈட்டித்தரவேண்டு மெனில், வியாபார நகர்வுப் போக்கை நன்றாக அவதானிக்க வேண்டும். இந்த அவதானத்தின் அடிப்படையில்தான் கொள்வனவை மேற்கொள்ளவேண்டும். (அதாவது ஏற்கனவே ஆரம்பத்தில் கொள் வனவு செய்த பொருட்களுக்கும், தற்போது இருப்பிலுள்ள பொருட் களுக்கும் இடையிலுள்ள விற் பனைப் பொருட்கள் சம்பந்தமான ஒரு அவதானிப்பு) அதாவது - எப் படிப்பட்ட பொருட்கள் அதிகம் விற் பனை செய்யப்பட்டுள்ளது, அதி லும் எந்த ரகம் அதிகம் விற்பனை யாகிறது என்பதை அவதானித்து, இதற்கான கொள்வனவு எண்ணிக்கை யைக் கூட்டவேண்டும். சில பொரு ட்கள் குறைந்த எண்ணிக்கையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின், இதற்கான கொள்வனவு எண்ணிக் கையைக் குறைக்கவேண்டும். இது மேல்வாரியான, பொதுவான கொள் வனவு முறைமை. இதனை சற்று ஆழ மாக ஆராய்வதற்கு மேலும் பல விடயங்களை நோக்கவேண்டும்.

### கொள்வனவு படிமுறைக் காலம்


வியாபாரம் ஆரம்பிக்கமுன்பே கொள்வனவு முறைப்பட்டியல் இடப் படவேண்டும். மாதக் கொள்வனவு, கிழமைக் கொள்வனவு, வருடக் கொள் வனவு, தற்காலிக நாளாந்தக் கொள் வனவு எனப் பல கொள்வனவுப் படி முறைகள் உண்டு. இவற்றில் நாம் மேற்கொள்ளும் கொள்வனவானது எந்தப் படிமுறையைச் சார்ந்தது எனத் தீர்மானமெடுத்தபின்பே கொள்வனவு செய்யும் பொருட்கள் பற்றிய பட்டி யல் இடப்படவேண்டும். ஏனெனில் கொள்வனவுப் பொருளின் பெறுமதி, விற்பனை வீதம், விற்பனைக் காலம் எனப்படும் மூன்று விடயங்களில்தான் வியாபாரத்தின் இலாபநட்டங்கள் தங்கியுள்ளது.

பெறுமதிகூடிய பொருட்கள் விற் பனையற்ற ரீதியில் காலநீடிப்புடன் கடைக்குள் முடக்கப்படும்போது, வியாபாரத்தில் நட்டம் ஏற்படும், இப்படிப்பட்ட பொருட்களை படி முறைக் கொள்வனவு முறைமூலம் கொள்வனவு செய்யும்போது, வாடி க்கையாளர்களின் நம்பகத் தன்மைக் காக மாத்திரம், குறைந்த எண்ணிக் கையில் கொள்வனவு செய்யவேண் டும்.

கொள்வனவுப் பட்டியல் இடும் போது, இந்தக் கொள்வனவு எவ்வளவு காலத்துக்குரியது, அந்தக் காலத் துக்குரிய விற்பனை வீதம் எப்படி அமையும் என்பதைக் கருத்திற் கொண்டு கொள்வனவு செய்தல் வேண்டும்.

### கொள்வனவுப் பொருளின் பெறுமதி

எமது சமூகத்து வியாபாரிகள் பெரிதும் எதிர்பார்ப்பதும், வியாபார த்தில் வெற்றிகரமான விடயமும் என்னவெனில் - குறைந்தது முதலீட் டில் அதிக இலாபம் பெறவேண்டு மென்பதேயாகும். இதனை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்த வேண்டு மெனில், கொள்வனவுப் பொருளின் பெறுமதியைக் கருத்திற்கொண்டு கொள்வனவை மேற்கொள்ளலாகும். இந்தப் பெறுமதிகூடிய பொருட் களைப் பெரும்பாலும் கிழமைக் கொள்வனவு, மாதக் கொள் வனவு முறை மூலம் குறை ந்த எண்ணிக் கையில் கொள் வனவு செய் தலே சிறந்தது. ஏனெனில் மூல தனம் இந்தப் பொருட்களால் கடைக்குள் முடக்கப்பட்டு விடுவதோடு, பெறுமதிகூடிய பொருட்கள் விற்பனையா கும் வீதமும் குறைவு.



### அதிக இலாபமீட்டும் பொருட்களும், ஏற்றுமதி இறக்குமதிச் செலவும்

அதிக இலாபத்தை ஈட்டித்தரும் பொருட்களென்று சில பொருட்கள் உண்டு. இப்படிப்பட்ட பொருட்கள் எந்தநேரமும் விற்பனை மையத்தில் இருத்தல் வேண்டும். அத்தோடு ஏற் றுமதி, இறக்குமதிச் செலவையும் கொள் வனவின்போது கருத்தில் எடுக்கவேண் டும்.

இந்தச் செலவானது - அதிகமாயின் கொள்வனவு இடைவேளையை நீடிக்க வேண்டும். அவ்வாறாயின் கொள்வனவுத் தொகையையும் அதிகரிக்கவேண்டும். இவற்றைவிட, விலை அதிகரிக்கும் பொரு ட்களென்றும் சில பொருட்கள் உண்டு. அத்தோடு- அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கும் பொருட்களும் உண்டு. இப் படிப்பட்ட பொருட்களுக்கான கொள்வன விலும் அதிக கவனமெடுக்கவேண்டும். எதிர்வரும் தொழில் மலரில் பொருட் களின் விலை, நிர்ணயம் பற்றி நோக்கு வோம்.

-ஆர்.கே.மேனன்

# வேம்பு - அதிசயிக்கத்தக்க குணாம்சங்கள் கொண்ட ஒரு மரம்

சனத்தொகைப் பெருக்கத்தால் உலகம் திக்குமுக்காடுகிறது. இத ற்கு ஒத்த வகையில், விஞ்ஞான மய மாக்கப்பட்ட யுகமாக உலகம் மாறியும் வருகிறது. இதன் காரண மாகச் சுற்றுச்சூழல் கணக்கிட்டுக் கூற முடியாத அளவில் மாச டைந்து, மக்கள் மத்தியில் புதுப்புது வருத்தங்களும், அசௌகரியங்க ளும் ஏற்பட்டுக்கொண்டே வரு கிறது.

இவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள - பல வகையான மருந்து கள், நுண்ணுயிர்கொல்லிகள், கிரு மிநாசினி என, தினம் தினம் அறி முகப்படுத்தப்பட்டுக் கொண்டும் இருக்கின்ற வேளையில், எம் கண் முன்னே இயற்கை தந்த பொக்கிஷ மாக மேலே கூறப்பட்ட பிரச்சி னைகளுக்கு நிவாரணியாக நிற்கும் வேப்பமரம் பற்றி நாம் சிந்திக் கின்றோமா...?

பரந்த நிலப்பரப்பைக் கொண்ட கிராமப் புறங்களில் மட்டும் தான் வளர்க்க முடியும். வளரும் என்ற காலம் போய், நகர்ப்புறங்களில் கூட கிடைக்கும் சிறிய காணியில் விசாலமாக வீடுஅமைந்திருக்கும் சூழலில் ஒரு வேப்பமரம் வளர்க்க வேண்டும், என்றநோக்கம் கொண்டு மக்கள் செயல்படுவதையும், சூழ லைப் 'பேண வீதி ஓரங்களில் மரம் நடுகையின் போது, அதிக எண் ணிக்கையில் வேப்ப மரங்களை நடுகைக்குத் தெரிவு செய்வதையும் காணலாம்.

வேப்பமரம் ஒரு அதிசயத்தக்க குணாதிசயங்களைக் கொண்ட வகை யைச் சாரும். இதன் வேர் முதல் உச் சக் கொப்பு வரையில் இருக்கும் பல்வேறு பகுதிகளும் நானவித தேவைகளுக்காக மிகவும் கிராக்கியு டன் பயன்படுத்தப்படுகின்றன. அதே நேரம் மருத்துவ தேவைகளுக்கென ஒரு தனியான இடத்தையும் கொண் டுள்ளது. இதன் பாவனை, பயன்பாடு பற்றிப் பார்ப்போம்.

01. சுற்றாடலைக் குளிர்ச்சியாக் கும். சுவாசத்துக்கு ஆரோக்கியமான காற்றையும் வழங்கும்.

02. தலையிடி, தலைச்சுற்று, உட ம்பு உழைச்சல், மூச்சுத்திணறல் என் பன போன்ற எந்தச் சாதாரண வருத் தமானாலும், உடன் ஒரு துப்புரவான வேப்பமர நிழலின்கீழ் சிறிதுநேரம் ஓய்வெடுத்துப் பாருங்கள்... நொடி யில் உபாதை பறந்தோடிவிடுவது டன், புத்துயிர் அடைந்து உற்சாக மாகி விடுவீர்கள்.

03. இரவில் நுளம்புத் தொல் லையா... தூக்கமில்லையா படுக்கும் பகுதியில் மண் சட்டியில் நெருப்புத் தணல் எடுத்து அதன்மேல் வேப்பம் விதைகளைத் தூவி, வெளிவரும் புகையை நாலாபுறமும் விசிறிப் பாருங்கள்... நுளம்பு எங்கே எனத் தேட வேண்டியிருக்கும். இது மட்டு மல்லாது புகை விசிறப்பட்ட இடத் தில் நாம் இருக்கும்போது நுளம்பு எம்மைக் கடித்தாலும், அதன் தாக் கங்களும், விறுவிறுப்பும் குறை வாகவே இருக்கும். இதை விஞ்ஞான ரீதியில்கூட நிரூபித்துள்ளார்கள்.

04. வேப்பம்பூவைக் காயவைத்து வடகம் போட்டு உணவுடன் சேர்த்து உபயோகிப்பர்.

05. உணவு சமைப்பதற்குக்கூட முன்னர் வேப்பம் விறகையே பெரி தும் நாடினர்.

06. பலவிதமான மருத்துவ தேவைக் கும் வேப்பிலை, வேப்பம் மரப் பட்டை, வேப்பம் விதைகள் பயன்படுத் தப்படுகின்றன.

07. ஈ, பூச்சி தொல்லைக்கு வேப் பம் எண்ணெய் தலைசிறந்தது. சில வகைப் பூச்சித் தாக்கத்தையும் வேப் பம் எண்ணெய் கட்டுப்படுத்துகிறது என்பதுடன், பூச்சிநாசினியாகவும் பாவிக்கப்படுவதுண்டு.

08. இரவு வேளையில் விடிவிளக்கு எரிக்க வேப்பம் எண்ணெயைப் பயன் படுத்திக்கொள்வதனால் வீண்புகை தொல்லைகளிலிருந்து ஒதுங்க முடி வதுடன், வேப்பம் புகையை சுவாசிப் பதனால் ஆரோக்கியத்தைப் பேணிக் கொண்டு நுளம்பையும் கட்டுப் படுத்தமுடியும்.

09. பற்களை வேப்பம் குச்சி கொண்டு துலக்குவதனால் பற்களை யும், ஈறுகளையும் திடகாத்திரமாக வும், ஆரோக்கியமாகவும் பேணலாம்.

10. வேப்பம் விதையிலிருந்து எண் ணெய் பெறப்பட்டபின்பு எஞ்சும்



சக்கை வேப்பம் பிண்ணாக்கு எனப்படும். இந்த வேப்பம் பிண்ணாக்கை பயிர்களுக்கு பசளையாக உபயோகிக்கலாம். இதை மண்ணுடன் சேர்த்துப் பசளையாக உப யோகிப்பதனால், கறையான் தாக்கத்திலிருந் தும் பயிர்களைப் பாதுகாக்கலாம்.

11. ஆடு வளர்ப்பில் ஆட்டுக்கு வேப்பம் குழையும் கலந்து உணவாக அளித்து, சிறந்த ஆரோக்கியத்துடன் வளர்க்கமுடிவதுடன் தீவன செலவீனத்தையும் குறைக்கலாம்.

12. வீடொன்றைப் புதிதாக நிர்மானிக் கும் போது, வேப்பமரம்தான் பிரதான பாத் திரம் வகிக்கிறது. கூரை வேலைக்கு வேப் பம் தீராந்திகள், நிலை, கதவுகள், வீட்டுத் தளபாடங்கள் என பல்வேறு தேவைகளுக் கும் வேப்பம் பலகை பயன்படுத்தப்படுகிறது.

உங்கள் வீடுகள், காணிகளில் நிற்கும் வேப்பமரங்களை கருணையுடன் நோக்குங் கள். அவை ஈட்டித்தரும் நன்மைகள், பயன் கள் ஏராளம்!... ஏராளம்!! ☆☆☆☆☆




# குழு ஒழுக்கம் என்பது - மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்டது




ஒரு நிறுவனத்தின் இலக்குகளை எய்தவும், மனித உறவுகள் நன்குஅமையவும் ஒழுங்கு உதவுகிறது. ஒழுங்கு குலையுமானால், செயற்பாடுகள் பாதிக்கப்படும்.

நிறுவனச்சூழலில் பணியாளர்களிடையே போட்டியிருக்க இயலாது. ஆனால் அது சச்சரவாக மாறக் கூடாது. ஒழுங்கு பின்பற்றப்படல் வேண்டும். அது மீறப்பட்டால் மீறியவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கை அவரைத் திருத்துவதாகவும், மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகவும் அமைய வேண்டும். ஒழுங்கை நிலை நாட்டும் போது, நடுநிலையோடு செயற்பட வேண்டும். ஒழுங்கை மீறுபவருக்குத் தண்டனை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கு வெப்ப அடுப்பு விதி பின்பற்றப்படுகிறது. வெப்ப அடுப்பைத் தொட்டால் சுடும் என்பது எல்லோருக்கும் தெரியும். இதேபோன்று ஒழுங்கு மீறப்பட்டால், தண்டனை உண்டு என்பது எல்லோருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். என்னென்ன தண்டனைகள் என்பதும் நடத்தை விதிகளில் கூறப்படவேண்டும். வெப்ப அடுப்பைத் தொட்டால் உடனே சுட்டு விடும். அதேபோன்று ஒழுங்கு மீறலுக்கும் உடனே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். காலந்தாழ்த்தி எடுக்கப்படும் நடவடிக்கை பயன்தராது. வெப்ப அடுப்பை யார் தொட்டாலும் சுடும். அதற்கு வேறுபாடு இல்லை. அதேபோன்று ஒழுங்கை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும்.

வேண்டியவர்களுக்குப் பரிவு காட்டவோ, வேண்டாதவர்களுக்கு மட்டும் தண்டனை அளிக்கவோ கூடாது. நடுநிலைமை வேண்டும். வெப்ப அடுப்பு எப்போதும் சுடும். நேற்று சுட்டது. இன்று சுடாது என்றில்லை. அதேபோன்று ஒழுங்கு எப்போது மீறப்பட்டாலும் தண்டனை உண்டு. இந்த விதிகள் பின்பற்றப்படுமானால், ஒழுங்கு குலைவதற்கு வழியே இல்லை.

ஒழுங்கு மீறுபவருக்கு முதலில் விளக்கம் அளிக்க வாய்ப்பளிக்க வேண்டும். எந்தச் சூழலில் அவர் ஒழுங்கை மீறினார் என்பதைக் கண்டறிய வேண்டும். கவனமின்றித் தவறு நிகழ்ந்ததா அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பதைக் கேட்டறிய வேண்டும். முதல் முறையாகத் தவறுநிகழ்ந்தது என்றால் அவர் தம் தவறுக்கு வருத்தம் தெரிவித்தார் என்றால் எச்சரிக்கை வழங்கலாம். எச்சரிக்கையும், கண்டனமும் கூடத் தண்டனை வகையைச் சார்ந்தவையே. ஒருவர் அடிக்கடி ஒழுங்கு மீறலைச் செய்கிறார் என்றால், கடுமையான தண்டனை வழங்கலாம். திருத்தவே முடியாத நிலையில் ஒருவர் ஒழுங்கு மீறலைச் செய்தால் இறுதி நிலையில் அவர் பணிநீக்கத்துக்குத்தான் ஆளாக வேண்டியிருக்கும்.

தண்டனை என்பது ஒருவரைத் திருத்தும் கருவியாக இருக்க வேண்டுமேயல்லாது, பழிவாங்கும் கருவியாக இருத்தலாகாது. ஒழுங்கு மீறலுக்குக் கண்டிக்கப்படும் ஒருவர் சிறந்த நடத்தைக்குப் பாராட்டப் படவும் வேண்டும்.

தனிமனித நடத்தைக்கும், குழு நடத்தைக்கும் வேறுபாடு உண்டு. தனிமையில் ஒழுங்கு மீறாமல் இருக்கும் ஒருவர் குழுவில் இருக்கும் போது, ஒழுங்கு மீறலைச் செய்யக் கூடும். எனவே குழுவொழுக்கம் பேணப்படவேண்டியது இன்றியமையாததாகும். ஒரு நிறுவனத்தின் நற்பெயர் குழுவொழுக்கத்தின் அடிப்படையில்தான் அமையும். ஒரு நிறுவனத்தின் குழுவொழுக்கம் - நல்ல நிலையில் உள்ளதா, மோசமான நிலையில் உள்ளதா என்பதைக் கண்டறியப் பல அளவு கோல்கள் உள்ளன.

எந்த நிறுவனத்தில் ஒழுங்கு நடவடிக்கைகளில் எண்ணிக்கை குறைவாக உள்ளதோ, அங்கு குழுவொழுக்கமும் மேலாகவுள்ளது என்பது பொருள். அடிக்கடி விருப்பு, வெறுப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், அங்கு குழுவொழுங்கம் குறைவு என்பது பொருள். ஒரு நிறுவனத்திலிருந்து பணி விலகிச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகமா இருந்தால், அந்த நிறுவனத்தின் குழு ஒழுக்கம் நல்ல நிலையில் இல்லை என்பதை அறியலாம்.

குழுவொழுக்கம் என்பது மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்டது. மனிதஉறவுகள் ஒரு நிறுவனத்தில் நல்லமுறையில் அமைந்திருந்தால் குழுவொழுக்கமும் உயர்ந்திருக்கும். எனவே மனித உறவுகளில் ஒரு நிறுவனம் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாகப் பணியாளர் நலன்களில் கவனம் செலுத்தும் நிறுவனத்தின் குழுவொழுக்கம் உயர்ந்து விளங்கும்.

ஒரு நிறுவனம் ஈட்டும் ஆதாயத்தில் உரிய பங்கைத் தன் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ஆண்டுதோறும் வழங்கிட வேண்டும். இதனால் மேலும் அதிக வருவாயை நிறுவனத்துக்கு ஏற்படுத்தித்தர அனைத்துப் பணியாளர்களும் முயல்வார்கள். இது குழு ஒழுக்கத்தையும் உயர்த்தும்.

எந்த நிறுவனத்திலும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். நல்ல தலைமையுடைய நிறுவனங்களின் குழுவொழுக்கம் சிறந்து விளங்கும். கடமையையும், கனிவையும் பணியாளர் நலனையும் நாடும் தலைமைக்கு அனைத்துப் பணியாளர்களின் ஆதரவும் கிடைக்கும். எனவே குழுவொழுக்கத்தைப் பேணி வளர்ப்பது குழுத் தலைவர்களின் முதன்மைப் பணியாகும்.

# துணிவான முடிவுகளை எடுப்பது முக்கியமல்ல சரியான முடிவுகளை எடுப்பதே முக்கியம்

உலகத்தில் இரண்டு வகையான மக்கள் தான் இருக்கிறார்கள். வழிகாட்டி நடத்திச் செல்பவர்கள், பின்பற்றிச் செல்பவர்கள். எனவே, நாம் ஒவ்வொருவரும் எந்தப் பிரிவில் இருப்பதற்கு விரும்புகிறோம் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இது எம்முடைய விருப்பம் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. எண்ணம், ஆற்றல், உறுதி ஆகியவை தொடர்பானது. எல்லோரும் ஜூலியஸ் சீசராகவோ, மகாத்மா காந்தியாகவோ ஆக விரும்புவதால் மட்டும் அவர்களாகிவிட முடியாது. அது எம்மிடமுள்ள ஆற்றலையும், அது எதற்கு மிகவும் ஏற்றது என்பதையும் பெரும்பாலும் பொறுத்ததாகும்.

ஒரு தலைவர் தேவைப்படாத துறை, வாழ்க்கையில் எதுவுமே கிடையாது. ஒரு சிலருக்கே, புகழ் பெற்ற தலைவர்களாக வேண்டும் என்ற கனவு இருக்கும். கனவை நனவாக்கி, மற்றவர்களை வழி நடத்திச் செல்வார்கள். ஆனால் பொதுவாக எல்லோருக்கும் தாம் மேற்கொண்ட துறையிலும், தொழிலிலும் வெற்றி பெற வேண்டும் என்ற நியாயமான நம்பிக்கை தான் இருக்கிறது.

ஒரு நண்பர் குழுவில், பிரபலமான ஒருவர் நகரில் ஓடும் திரைப்படங்களில் ஒன்றைக் குறிப்பிட்டு, அதுதான் சிறந்த படம் என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். எல்லோருமே ஆமாம் என்பார்கள். அவர்களில் ஒருவர் அவ்வாறு கருதாவிட்டாலும் கூட மறுத்துக் கதைக்கமாட்டார். தன்னுடைய சொந்தக் கருத்தைப் புறக்கணித்துவிட்டு பேசாமல் ஒத்துப் போய் விடுவது தான் நல்லது என்று நினைப்பார். கும்பலோடு சேராத ஒருவராக அவர் இருக்க விரும்புவது இல்லை.

இங்கு தான் தலைமைக்குரிய ஒவ்வொருவரின் ஆற்றலும் வருகிறது. சுற்றியிருப்பவர்கள் எல்லோருமே 'ஆமாம்' என்று குரலெழுப்பும் போது, நமக்கு மட்டும் 'இல்லை' என்று கூறத் தைரியம் இருக்கிறதா? எதையும் கண்டு அஞ்சும் இயல்பு தான் மிகப்பெரிய தவறுகளைச் செய்வதற்கு இடமளிக்கிறது.

இத்தகைய போக்கு, எங்கும் சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது. இதன் விளைவாகத் தலைமைக்குத் தகுதியானவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். நிர்வாகத் திறமை கூட இல்லாத பரிதாப நிலையைக் காண்கின்றோம். இப்போது எமக்குத் தேவை நிர்வாகத் திறமை தான். வேறு விதமாகச் சொல்வதானால் குழுத் தலைவர்கள் நிறைய வேண்டும்.

ஒரு முடிவெடுப்பதற்கு அஞ்சுவதே நிர்வாகத் திறமையில் இன்று நிலவும் பல பிரச்சினைகளுக்குக் காரணமாகும். உடனுக்குடன் முடிவெடுக்கும் ஆற்றல் தான் ஒரு நிர்வாகியையும், ஒரு தலைவரையும், ஒரு கிளார்க்கையும் வேறுபடுத்திக்காட்டுவது.

ஷீலா கோல்ட் என்பவர் எழுதுகிறார், 'என்னைப் போல ஒரு பெரிய தொழில் நிறுவனத்தில் பணியாற்றுவதால், ஒருவருக்குப் பெரிய தொழிலதிபர்களை மிக அருகிலிருந்து கவனிக்க முடிகிறது. அவர்கள் எல்லோரிடமுமே காணப்படும் பொதுவான அம்சம் ஒன்று தான். முடிவெடுக்கும் திறமையும், அதன்படி உறுதியாக நடப்பதும், அதனால் தவறு எதுவும் நேர்ந்தால் பிறர் மீது பழி போடாமல் தாமே அதற்குப் பொறுப்பு ஏற்பதும் தான் அது. ஒரு தொழிலதிபரின் வெற்றிக்குக் காரணம் என்ன? மூன்று விடயங்கள் மிகவும் முக்கியமானதாக எனக்குத் தோன்றுகிறது. உறங்காமல் கூட 24 மணிநேரமும் செயற்படத் தயாராக இருக்கும் வியப்பூட்டும் ஆற்றல், உடனடியாக முடிவெடுக்கும் திறமை, எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் சாதாரண விபரங்களையும் நுட்பமாக கவனிப்பதும் ஆகும்'.


ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் ஒருவர் ஆலோசனை கேட்டால் அவருக்குத் திருப்தியளிக்கும் என்பதற்காகத் தவறான யோசனையை கூறக்கூடாது. நிச்சயமாக உங்களுக்கு சரியென்றுபடுவதையே கூறவேண்டும். அதனால் அதிருப்திக்குள்ளாக நேர்ந்தாலும் கவலைப்படக் கூடாது. அதிருப்தி தற்காலிகமானதாகத்தான் இருக்கும். நீங்கள் சொன்னது தான் சரியென்று நிரூபிக்கப்படும் போது அதுவே உங்களைப்பற்றிய நல்அபிப்பிராயமாக மாறிவிடும்.

எதிர்த்துக் கதைக்காமல் எல்லோருடனும் ஒத்துப் போவது மகிழ்ச்சியும், மனத் திருப்தியும் தருவதாக இருந்தாலும் கூட அது சரியான வழியல்ல.

இந்த அற்ப சந்தோஷத்துடன் திருப்தியடைபவராக நீங்கள் இருந்தால், வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமென்று எதிர்பார்க்க முடியாது.

கூட்டத்தோடு, கூட்டமாக ஆமாம் சொல்வது தவறல்ல. எதற்கு ஆமாம் சொல்கிறோம் என்பதைப்பொறுத்தது ஆகும். ஒரு படத்தைப் பற்றிய விமர்சன அபிப்பிராயம் உங்களது சொந்த அபிப்பிராயம்.

இதில் உங்களது சொந்தக் கருத்தைப் புறக்கணித்து விட்டு, ஏனையோருடன் ஒத்துப் போய் விடுவது தவறு. அதேபோல் தொழில் ரீதியாக நிர்வாகம், தொழில் முயற்சி பற்றிய அபிப்பிராயங்கள் வரும் போது, உங்களுக்குச் சரியென்றுபடுவதையே கூறவேண்டும். வாழ்க்கையில் நாம் துணிவான முடிவுகளை எடுப்பது முக்கியமல்ல. சரியான முடிவுகளை எடுப்பதே முக்கியம்.



அதற்காகத் தேவையற்றதற்கெல்லாம் விதண்டாவாதம் புரிவதும் தவறு. ✪✪✪

# கிளிநொச்சி மருதநகர் கிராமத்தில் தொல்லியல் பொருட்கள் கண்டுபிடிப்பு!

விசுவமடு

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் புதிதாக வெட்டிய கிணறு ஒன்றிலிருந்து தொல்லியற் பொருட்கள் தமிழீழ அரும் பொருள்காப்பு நடுவகப் பணியகத்தால் மீட்கப்பட்டன.

கிளிநொச்சி 4 ஆம் வாய்க்கால் பகுதியிலுள்ள மருதநகர் கிராமத்தில் பல காலமாக வசித்துவந்த மாரிமுத்து விசுவநாதன் குடும்பத்தினர் கடந்த திங்கட்கிழமை தமது காணியில் புதிதாக கிணறு வெட்டும்போது, மட்பாண்டப் பொருட்கள் இருப்பதைக் கண்டனர். வீட்டு உரிமையாளர் கிணறு வெட்டுதை நிறுத்திவிட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ அரும் பொருள் காப்பு நடுவப் பணியகத்துக்குச் சென்று இது பற்றித் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து அரும்பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் மற்றும் தொல்லியல் பொருட்கள் தேடல் குழு, ந. குணரட்ணம் தலைமையில் அந்த இடத்துக்குச் சென்று, காலை தொடக்கம் மாலை வரை ஆய்வுகள் மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் எமது முன்னோர் பாவித்த தொல்பொருட்களான நான்கு கால்களையுடைய கருங்கல் அம்மி மற்றும் சுடு மண்ணால் ஆன மட்பாண்டங்கள், சமையல் பாத்திரங்கள், முன்னோர் பாவித்த மணிகள், அணிகலன்கள் எனப் பல பொருட்கள் கிணற்றிலிருந்து மீட்டனர்.

இந்தத் தொல்லியல் பொருள் மீட்பு நடவடிக்கையின்போது தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் மற்றும் தமிழீழ அரும் பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன், வீட்டு உரிமையாளர் விசுவநாதன் மற்றும் பெருமளவானோர் ஈடுபட்டனர்.

தமிழீழப் பகுதியில் எங்காவது தொல்லியல் பொருட்கள் காணப்படுமாயின், பொதுமக்கள் தமது தேசிய நலன்கருதி கிளிநொச்சி அரும்பொருள் காப்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் கேட்டுள்ளார். (மு)

# கோட்ட மட்டப் பேச்சுப் போட்டி

கண்டாவளை

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தில் கண்டாவளைக் கோட்டப் பேச்சுப் போட்டிகள் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு முரசு மோட்டை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி, 'அ' பிரிவிலிருந்து 'உ' பிரிவு வரையான சகல பிரிவுகளுக்கும் நடைபெறவுள்ளது. முதல் மூன்று பிரிவுகளுக்குமான பேச்சுப் போட்டித் தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றைய இரு பிரிவுகளுக்குமான தலைப்புக்கள் அரை மணித்தியாலத்திற்கு முன் வழங்கப்படும்.

# வர்த்தகரை காணவில்லை

மன்னார்

மன்னார் - நிலாங்கன் குளம் வட்டக்கண்டலைச் சேர்ந்த வர்த்தகர் வேலு அப்புச்சாமி (வயது 67) என்பவரைக் காணவில்லை என அவரது மகன் செல்லச்சாமி முத்து (வயது 30) செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் செய்துள்ளார்.


கதிர்காமம் முருகன் கோவிலுக்கு வழிபடச் சென்ற வேலு அப்புச்சாமி வீடு திரும்பாததையடுத்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் பொலிஸாருக்கும் இது குறித்துப் புகார் செய்யப்பட்டுள்ளது.

# வன்னி மாவட்டத்தில் இரண்டரை லட்சம் வாக்காளர்கள்

கிளிநொச்சி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வன்னி மாவட்டத்திலிருந்து சுமார் இரண்டரை இலட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 854 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 78 ஆயிரத்து 906 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 66 ஆயிரத்து 596 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.



# காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர்–08** **இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

1664: அமெரிக்காவில் டச்சுக் குடியேற்றமாக இருந்த "நியூஅம்ஸ்டர்டாம்" நகரை பிரிட்டிஸ் படை தாக்கி, கைப்பற்றி அந்த நகருக்கு "நியூயோர்க்" என்ற பெயரைச் சூட்டியது.

1755: டென்மார்க் கிழக்கிந்தியக் கம்பனியானது, நிக்கோபார் தீவில் குடியேற்றுவதற்காக ''கிங்ஒவ்டென்மார்க்'', "எவனேசர்" என்ற இரு கப்பல்களிலும் 83 பேரை ஏற்றி அனுப்பிவைத்தது.

1760: கனடாவை பிரான்ஸிடம் இருந்து, பிரிட்டிஷ் படையினர் கைப்பற்றினர்.

1886: தென்னாபிரிக்காவில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜோகனஸ் பேர்க் நகரத்தை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

1900: டெக்ஸாஸில் கால்வெஸ்டாணில் மணிக்கு 200 கி.மீ வேகத்தில் சூறாவளி வீசியது. மெக்ஸிக்கோ குடாக் கடல் பொங்கி நகரினுள் நுழைந்தது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர்.

1918: முதலாம் உலக மகாயுத்தம் தொடர்பில் -ஓகஸ்ட் 8 முதல் இன்று வரையான ஒரு மாத காலப்பகுதியில் மட்டும் 150,000 போர் வீரர்களைக் கைதியாகப் பிடித்திருப்பதாகவும், 2,000 பீரங்கிகளையும், 13,000 இயந்திரத் துப்பாக்கிகளையும் கைப்பற்றி இருப்பதாகவும நேசப்படைத் தலைமையகம் அறிவித்தது.

1937: சிரியாவின் புளூடான் என்னுமிடத்தில் அனைத்து அரபுநாடுகளின் மகாநாடு நடைபெற்றது. பாலஸ்தீனப் பிரச்சினை பற்றியே இந்த மகாநாடு விவாதித்தது. பல தீர்வுகளை முன்வைத்தது.

1941: ஜேர்மனியப் படைகளால் லெனின் கிராட் முற்றுகையிடப்பட்டது.

1945: கொரியா இரண்டாகப் பிளவுபட்டது. அமெரிக்கா தென் கொரியாவையும், ரஷ்யா வட கொரியாவையும் ஆதரித்து நின்றன.

1951: கலிபோர்னியாவில் சன்பிரான்ஸ்ஸிஸ்கோ நகரில், ஜப்பான் 48 நாடுகளுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டது. அத்துடன் அமெரிக்காவுடன் தனியாக பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் ஜப்பான் செய்து கொண்டது.

1952: முதலாவது அகில உலகப் பதிப்புரிமை மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது. 35 நாடுகள் கலந்து கொண்டு உடன்படிக்கை செய்து கொண்டன.

1954: தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் அமைப்பு(SEATO) என்பது மணிலாவில் வைத்து ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கையில் தாய்லாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஒப்பமிட்டன.

1962: இந்திய எல்லைக்குள், இந்தியாவின் கிழக்கு முனையில், சீன இராணுவம் முதன் முதலாக ஊடுருவத்தொடங்கியது.

1967: அமெரிக்கா சர்வேயர் -5 என்ற விண்கலத்தை ஏவியது. இது 11 ஆம் திகதி சந்திரனில் அமைதிக்கடல் என்னும் பகுதியில் தரை இறங்கியது.

1972: இஸ்ரேல் குண்டுவீச்சு விமானங்கள் சிரியா, லெபனான் ஆகிய நாடுகளிலுள்ள தீவிரவாதிகளின் தளங்கள் மீது குண்டு வீசித் தாக்கின.

1978: ஈரானில் மன்னர் ஷா நாடெங்கும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். மன்னருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை இராணுவம் கொன்றழித்தது. ஈரானிய வரலாற்றில் இந்த நிகழ்வு "கறுப்பு வெள்ளிக்கிழமை" எனக் குறிப்பிடப்படுகிறது.

1981: அணு விசையில் மீஸான் என்னும் அணுத்துகள்கள் இருப்பதை ஊகித்துக் கூறியதற்காக 1949 ஆம் ஆண்டுக்கான பௌதிகவியலுக்குரிய நோபல் பரிசைப் பெற்றவரான ஜப்பானைச் சேர்ந்த "ஹிடேகி யுகாவா" காலமானார். நோபல்பரிசு பெற்ற ஜப்பானின் முதலாவது அறிஞர் இவர்.

1985: இளம்பிள்ளை வாதத்தை ஏற்படுத்தும் போலியோ மைலிட்டிஸ் வைரஸ்கள் பல வகைத் திசுக்களிலும் வளரும் தன்மை உடையவை என்பதைக் கண்டுபிடித்தற்காக 1954 ஆம் ஆண்டுக்கான மருத்துவத்துவக்குரிய நோபல் பரிசை வென்ற அமெரிக்கர் ஜோன் பிராங்ளின் எண்டர்ஸ் காலமானார்.

2000: முதலாவது எல்லைப் படை வீரரான அப்பன் காலமானார்.

☆ உலக பத்திரிகையாளர் தினம்

தொகுப்பு - சந்துரு

# தட்டுவன் கொட்டிப் பிரதேசத்தில் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி

தட்டுவன்கொட்டி நிர்மலன் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை மாவீரர் நிர்மலனின் பெற்றோர், கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கண்டாவளைப் பிரதேச அரசியற்துறையைச் சேர்ந்த தமிழினியன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை கண்டாவளைப் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் கீதன் ஏற்றி வைத்தார். இதையடுத்து முன்பள்ளி மேம்பாட்டுக் கொடி, கே.என்.டீ.ஓ. நிறுவனக் கொடி, முன்பள்ளிக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

தொடர்ந்து சிறார்களின் அசைவும், இசைவும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்புரையை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கெங்காதரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.தியாகராசா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த யோ.தீபன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த முன்பள்ளி - கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடத்தை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் அமைப்பதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையகத்தினால் தையல் பயிற்சி நிலையம் திறப்பு; சான்றிதழ் வழங்கல்

ஒட்டுசுட்டான்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பொருண்மிய மதியுரையகத்தால், புதிதாக தையல் பயிற்சியை மேற்கொள்வோருக்கான தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், கணினிப் பயிற்சி நெறியை பூர்த்திசெய்த 32 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட் டான் பிரதேச செயலக பொருண்மிய மதியுரைகத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் வை.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் சுபாசினி கந்தையா, ஒட்டுசுட்டான் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆனந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தையல் பயிற்சி நிலையத்தை லண்டன் பொருண்மிய மதியுரையகத் தலைவர் வசந்தன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார். லண்டன் பொருண்மிய மதியுரையகத்தின் செயலாளர் குணபாலசிங்கம் தையல் பயிற்சியினை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் - மங்கள விளக்கை பெருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன், ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர். வேலாயுதம் பிள்ளை, முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன், கனடா பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த வில்லியம், கணினிப்பயிற்சி ஆசிரியர் சக்திதாஸ் முன்பள்ளி முதன்மை ஆசிரியர், கணினிப்பயிற்சி ஆசிரியர் கோடீஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்தார். வரவேற்புரையை ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையக நிர்வாக அலுவலர் வி.சுகந்தினி நிகழ்த்தினார். தலைமையுரையை ஒட்டுசுட்டான் வை.விமலேந்திரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் சிறப்புரையாற்றுகையில் -

இந்தப் பிரதேசத்தில் கணினிப் பயிற்சி நிலையம் அமைப்பதன் மூலம் பல மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று தையல் பயிற்சி நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் இதேபோன்று பல பயிற்சிகளைப் பொருண்மிய மதியுரையகத்தினால் வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் இறுதியில் அமெரிக்கப் பொருண்மிய நிதியுதவியுடன் ஏழு பயனாளிகளுக்கு கடன் அடிப்படையில் சூரிய மின்கலம் வழங்கப்பட்டது.

நமது ஈழநாடு



திருக்குறள்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

## நமது நோக்கு

### அரசே பொறுப்பேற்க வேண்டும்!

போர்நிறுத்த உடன்பாட்டின்படி - இரானுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் போராளிகள் மீதான அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் தீவிரமடைந்ததையடுத்து - புலிகளின் தலைமைப்பீடம் போராளிகள் அனைவரையும் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் திருப்பி அழைத்துள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசியற்துறை அலுவலகங்கள் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி வந்தன.

அதுமட்டுமன்றி - போராளிகள் கைது செய்யப்படுதல், சுட்டுக்கொல்லப்படுதல், அரசியல்துறை அலுவலகங்களுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தேடுதல் நடத்தப்படுதல் என தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த சம்பவங்களின் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டமும், அதிகரித்துவரும் துணைப்படைகளின் நிழல் யுத்தமும்தான் மீண்டுமொரு நெருக்கடியான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் அரச படைகளுக்கு - எவரையும் காரணமின்றிக் கைது செய்யவும், தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள் நடத்தவும் அதிகாரம் உண்டு. போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய தவிர்க்கப்படவேண்டிய விடயங்களில்கூட படையினர் தலையீடு செய்வதற்கு அவசரகால விதிகள் இடம் கொடுத்திருக்கின்றன.

போர் நிறுத்தமும் அவசரகாலச் சட்டமும் ஏக காலத்தில் நடைமுறையில் இருப்பது சாத்தியமற்றதென்ற புலிகளின் கருத்து தற்போது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானதென்று அனைவராலும் உணரப்பட்டிருக்கிறது.

அதுபோன்றே அரசாங்கம் தனது பாதுகாப்பில் வைத்திருக்கும் துணைப்படை ஆயுதக்குழுக்களைக் கொண்டு புலிகள் மீதான தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியிருக்கிறது. இந்தத் தாக்குதல்களின் விளைவாக புலிகள் சிரேஷ்ட போராளிகள் உட்பட பலரை இழந்து விட்டனர்.

விடுதலைப்புலிகள் இந்த விடயத்தில் கடும்போக்குடன் நடந்துகொள்ளாமல் - அமைதி முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுத்துவந்ததை அரச தரப்பு பலவீனமாகக் கருதிவிட்டது போலவே தெரிகிறது.

இதனால்தான் புலிகள் மீதான தாக்குதல்களை துணைப்படைகளைக் கொண்டு தொடர்ந்து நடத்தி வருகிறது. போர் நிறுத்த உடன்பாட்டை செம்மையாக அமுல்படுத்துவது தொடர்பாக அவசரமாகப் பேச வேண்டும் என்று அழைப்பு விடுத்த அரசாங்கம் - இப்போது அந்தப் பேச்சையே கைவிட்டுவிட்டது.

இந்த நிலையில், தென்னிலங்கை அரசியல் நிலைமையும் போருக்கு வழிவகுப்பதாகவே மாறி வருகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி. அமைத்திருக்கும் கூட்டு நிச்சயமாக சமாதான முயற்சிகளுக்கு சமாதி கட்டும் என்ற கருத்தே வலுவாகவுள்ளது.


தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளுக்கும் - அவர்களின் உரிமைப் போராட்டங்களுக்கும் ஆப்புவைக்கும் வகையிலான ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடன்பட்டிருப்பது- யுத்தத்துக்கான அறைகூவலாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் யுத்த நிறுத்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேச்சு நடத்தத் தயாராக இல்லாத நிலையில் - புலிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகமே.

இப்படிப்பட்ட நிலையில் புலிகள் தமது போராளிகளை மீளத் திருப்பியழைப்பதைவிட வேறு வழியில்லை. அரசியல் போராளிகள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வெளியேறிச் சென்றிருப்பது புதிய நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடிகளுக்கு அரசு உடனடித் தீர்வுகாணத் தவறினால் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க நேரிடும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# அமெரிக்காவே ஆடிப்போகையில் இவர்கள் எங்கே போகிறார்கள்?

என்னை மிஞ்சியவன் இந்த உலகில் யாரடா? என்று இறுமாப்புக் கொண்டிருந்த அமெரிக்காவே கத்ரின் சூறாவளியினால் ஆடிப் போயிருக்கிறது. இங்கேயோ கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கொரு கட்டமைப்பை ஏற்படுத்தவே ஜே.வி.பியை மலைபோல் வழி மறித்துப் பார்த்தது.

உலக நாடுகள் முன் மானம் போகாமல் காப்பாற்றுவதற்காக ஜே.வி.பி உதறித் தள்ளிவிட்டு கட்டமைப்பை பெயர் மாற்றி அமைத்தார் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார். இந்தப் பதவியில் அவர் இனி நீடிக்கவா போகிறார். அவருக்குப் பதிலாக அவரே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்திய மகிந்தவைக் கொண்டே அந்தக் கட்டமைப்பை ஒழித்து விடத் துடிக்கிறது. அதே ஜே.வி.பி இன்று இதற்கு மகிந்தவும் உடன்பட்டிருக்கிறார். அம்மையார் அன்று ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் முன் வீரவசனம் பேசினார் இன்று எதுவும் சொல்லாமலிருப்பது ஏனோ? என்று கேட்டபடி வந்தமரந்தார் நண்பர் பரமசிவம்.

உலகில் எந்த மூலையில் என்ன நடந்தாலும் உடனே அந்த இடத்துக்குள் மூக்கை நுழைப்பது அமெரிக்காவின் வழக்கம். உலகில் பாதிக்கப்பட்டவர்களும் உடன் எதிர்பார்ப்பதும் அமெரிக்காவின் உதவியைத் தான். இன்று அமெரிக்காவே உலக நாடுகளிடம் உதவியைக் கோரி நிற்கிறது. பரமவைரியாகக் கருதி கியூபாவை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று நினைத்த அமெரிக்காவுக்கு இன்று சூறாவளியால் பாதிக்கப்பட்டு அல்லற்படும் மக்களுக்கு உதவுவதற்காக கியூபா மருந்துகளையும், மருத்துவர்களையும் அனுப்பி உதவிக்கொண்டிருக்கிறது.

கேட்பார் சொல்லுக் கேட்டு விடுதலைப் புலிகளைத் தடைசெய்த அமெரிக்காவுக்கு உதவுவதற்காக விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமெனச் சொல்லப்படும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிதி திரட்டி உதவுவதற்கு முன் வந்திருக்கிறது.

இந்த நிலையில் இலங்கையின் தமிழர் தாயக பூமியான வடக்கு - கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கி சில உதவிகளை வழங்கியிருந்தன. அவற்றைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு ஒரு கட்டமைப்பை அமைப்பதற்கே ஜே.வி.பி தடைக்கல்லாய் நின்றது. இதையும் வெளிநாட்டாரின் முகத்துக்கு அஞ்சி சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியையும் மிஞ்சி கட்டமைப்பை உருவாக்க முன் வந்தார். இதைக் கூட இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சந்திரிகா அம்மையாரின் வேட்பாளரைக் கொண்டே இல்லாமல் செய்வதற்கு ஜே.வி.பி முனைந்துநிற்கிறது. அம்மாவும் வளைந்து கொடுத்துவிட்டாரோ தெரியவில்லை. ஆனால் அமெரிக்காவே ஆடிப்போகும் நிலை இங்கும் ஏற்படாதென்று என்ன நிச்சயம். இது சூறாவளியால் மட்டும்தான் வரவேண்டுமா? வேறுவழியில் வரமுடியாதா? என்று கேட்டேன்.

போகிறபோக்கைப் பார்த்தால் நீர் சொல்லும் வேறுவழி விரைவில் வந்தாலும் வந்துவிடும் போலிருக்கிறதே என்றார் பரமசிவம்.

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் இருவர் இருவராகக் கொல்லப்படுகிறார்கள்.

- வெளிநாட்டிலிருந்து திருமணத்துக்காகக் கொழும்புக்கு வரும் உறவுக்காரப் பெண் ஒருவரை வரவேற்று அழைத்துவருவதற்காகக் கொழும்பில் போய் இறங்கிய குருநகர் இளைஞர் இருவர் கொல்லப்பட்டார்கள். இவர்கள் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்தவர்கள் என்று செய்திவெளியிட்ட பத்திரிகை மீதோ, இந்தத் தகவலைக் கொடுத்த பொலிஸ்காரரர் மீதோ விசாரணை எதுவுமில்லை.

- வெளிநாட்டுக்குச் சென்ற ஒருவரை வழியனுப்பி விட்டுத் திரும்பிய மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். எந்த விசாரணையுமில்லை.

- கிண்ணியாவைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு, வாயும் கட்டப்பட்ட நிலையில் ராகமவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்று கொலைசெய்யும் இந்த மர்ம ஆசாமிகள் யார்? எந்தக் கொலை நடந்தாலும் புலிகள் மீது உடனேயே பழிபோடும் விற்பன்னர்களும், ஊடகங்களும் இந்தக் கொலைகள் பற்றி ஏன் மூச்சுவிடுவதில்லை? என்று கேட்டேன்.

இவை ஒருபுறமிருக்க மட்டக்களப்புப் பகுதியில் புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தவும் தொடங்கியிருக்கிறார்கள். இராணுவத்துக்கும், இவற்றுக்கும் தொடர்பில்லை என்கிறார்கள். இது புலிகளின் உள்வீட்டுச் சண்டை என்றும் சொல்கிறார்கள். துணைப்படையாக ஆயுதக் குழுக்களை வைத்திருப்பவர்கள் யார்? இந்தத் தாக்குதல்கள் இவர்களை அறியாமல் நடக்கிறதென்றால் பாதுகாப்புப்படை என்ற பெயரில் தமிழர் தாயகப் பகுதியில் இந்தப் படைகள் எதற்காகத் தங்கியிருக்கின்றன? என்று பரமசிவம் சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு நியமனப்பத்திரம் இன்னும் தாக்கலாகவில்லை. இப்பொழுதே பிரதமரின் அலவலகம் ஜே.வி.பியுடன் உடன்பாடு எதுவும் செய்யப்படவில்லை, ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம் எதுவுமில்லை என்று மறுப்பு அறிக்கை வெளியிடத் தொடங்கிவிட்டதே என்றேன்.

இந்தச் செய்திகள் வெளிவந்ததுமே ஏன் பிரதமர் மறுக்கவில்லை. இரவிரவாக இலக்கத்தகடில்லாத வாகனத்தில் ஜே.வி.பி தலைவர்கள் அலரி மாளிகைக்குச் சென்று பேசியது உண்மையில்லையா? இப்படி இனி இன்னும் பல மறுப்பறிக்கைகள் பல தரப்புகளிலிருந்தும் வெளிவரலாமென்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

"ஆடிக்காற்றுக்கு அம்மியும் குழவியுமே பறக்கும் போது இலவம் பஞ்சு எம்மாத்திரம்".

ஆனானப்பட்ட அமெரிக்காவே அகதிகள், நிவாரணம் என்று அவலப்படுகையில் இங்குள்ளவர்கள் எங்கே? என்று பரமசிவம் மேலும் சொல்லிக்கொண்டு போனார்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.

பிரதேச ரீதியாகத் தெரிவானோரின் விபரம் வருமாறு:

**சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு**

**மூப்பு அடிப்படையில் தெரிவானோர்**

நேற்றைய தொடர்ச்சி....

709 யா/சா/6079 திரு. கதிரன் வயிரமுத்து
710 யா/சா/6081 திரு. இன்னாசிமுத்து
வில்லியம்லோறன்ஸ்
711 யா/சா/6086 திருமதி. அன்னமுத்து தம்பிமுத்து
712 யா/சா/6087 திரு. கந்தையா சுப்பிரமணியம்
713 யா/சா/6131 திருமதி. தங்கம்மா
கோவிந்தபிள்ளை
714 யா/சா/6136 திரு. வயிரமுத்து இரத்தினம்
715 யா/சா/6183 திரு. முத்தர் சின்னத்தம்பி
716 யா/சா/6213 திரு. வேதவனம் குமாரசாமி
717 யா/சா/6246 திரு. கணபதி ஐயாத்துரை
718 யா/சா/6252 திரு. விஸ்வலிங்கம் இராமசாமி
ஜெயரத்தினம்
719 யா/சா/6269 திருமதி. பொன்னம்மா சின்னத்துரை
720 யா/சா/6279 திரு. குணரத்தினம் ஜேம்ஸ்குணசீலன்
721 யா/சா/6310 திருமதி. நாகம்மா செல்லத்துரை
722 யா/சா/6317 திருமதி. மாணிக்கம் கணபதி
723 யா/சா/6326 திருமதி. நாகம்மா பொன்னன்
724 யா/சா/6332 திருமதி. அன்னம்மா இரத்தினம்
725 யா/சா/6337 திரு. வைத்திலிங்கம் தம்பிஐயா
726 யா/சா/6340 திரு. செல்லப்பா முத்தையா
727 யா/சா/6342 திரு. தியாகராசா செல்லத்துரை
728 யா/சா/6354 திரு. இராமு கதிரவேலு
729 யா/சா/6363 திருமதி. சிதம்பரம் சுப்பிரமணியம்
730 யா/சா/6383 திரு. சின்னப்பு விநாயகமூர்த்தி
731 யா/சா/6386 திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு
732 யா/சா/6389 திருமதி. பராசக்தி கார்த்திகேசு
733 யா/சா/6413 திரு. அருணாசலம் இராமநாதன்
734 யா/சா/6436 திரு. நமசிவாயம் இராமலிங்கம்
735 யா/சா/6442 திரு. முருகேசு மார்க்கண்டு
736 யா/சா/6444 திருமதி. சின்னம்மா
கதிர்காமத்தையன்
737 யா/சா/6445 திரு. சின்னவி தம்பையா
738 யா/சா/6469 திரு. கனகசபை முத்துலிங்கம்
739 யா/சா/6471 திரு. கதிரவேலு நாகராசா
740 யா/சா/6495 திருமதி. பசுபதி செல்லன்
741 யா/சா/6521 திரு. கதிரவேலு கந்தையா
742 யா/சா/6549 திருமதி. தவமணி அரசரத்தினம்
743 யா/சா/6550 திரு. சின்னப்பொடி முருகேசு
744 யா/சா/6553 திரு. தம்பு செல்லத்துரை
745 யா/சா/6562 திருமதி.சேதுப்பிள்ளை பொன்னையா
746 யா/சா/6566 திரு. முத்துத்தம்பி பொன்னுத்துரை
747 யா/சா/6568 திரு. முருகன் கதிரவேலன்
748 யா/சா/6583 திருமதி. நாகம்மா நன்னித்தம்பி
749 யா/சா/6586 திரு. செல்லமுத்தர் குமாரசுவாமி
750 யா/சா/6589 திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு
751 யா/சா/6609 திரு. சுப்பர் நல்லதம்பி
752 யா/சா/6616 திருமதி. சின்னம்மா கனகன்
753 யா/சா/6620 திரு. இராமலிங்கம் தம்பையா
754 யா/சா/6622 திரு. கார்த்திகேசு சுப்பையா
755 யா/சா/6631 திரு. கந்தையா கணேஸ்
756 யா/சா/6643 திருமதி. பொன்னி கதிர்காமு
757 யா/சா/6648 திருமதி.மனோன்மணி பொன்னுத்துரை
758 யா/சா/6672 திருமதி. மகேஸ்வரி குருசாமி
759 யா/சா/6676 திரு. மொறிஸ்அலோசியஸ்
பொன்ராசா
760 யா/சா/6691 திரு. சின்னப்பு பிள்ளையினான்
761 யா/சா/6694 திரு. வைத்திலிங்கம் சின்னராசா
762 யா/சா/6697 திருமதி.செல்லம்மா வைத்திலிங்கம்
763 யா/சா/6705 திருமதி. டெய்சிதேவமலர்
கிருபைரத்தினம்
764 யா/சா/6728 திரு. கதிரேசு நல்லையா
765 யா/சா/6762 திரு. செல்லப்பா பாலசுந்தரம்
766 யா/சா/6768 திரு. இராமநாதன் மன்மதராஜன்
767 யா/சா/6775 திரு. சடையன் கந்தன்
768 யா/சா/6781 திருமதி. இலச்சுமி செல்லப்பா
769 யா/சா/6790 திரு. சின்னையா செல்லத்துரை
770 யா/சா/6795 திருமதி. இராசபூபதி மாணிக்கவாசகர்
771 யா/சா/6799 திரு. வேலுப்பிள்ளை வாமதேவன்
772 யா/சா/6800 திருமதி. அமிர்தபவானி
துரைரத்தினம்
773 யா/சா/6813 திரு. ஆண்டி வெள்ளையன்
774 யா/சா/6814 திரு. நமசிவாயம் ஐயாத்துரை
775 யா/சா/6815 திரு. எஸ்தாக்கி அகஸ்ரீன்
776 யா/சா/6827 திருமதி. வள்ளிமுத்து
கணபதிப்பிள்ளை
777 யா/சா/6833 திரு. முத்தையா இரத்தினம்
778 யா/சா/6848 திரு. இராமசாமிக்குருக்கள்
செல்லத்துரைஐயர்
779 யா/சா/6861 திரு. செல்லப்பா கனகசபை
780 யா/சா/6868 திரு.சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி
781 யா/சா/6877 திருமதி. திரேசம்மா இன்னாசிமுத்து
782 யா/சா/6885 திருமதி. விவேகவதி யோகரட்ணம்
783 யா/சா/6920 திரு. சின்னையா சோமசுந்தரம்
784 யா/சா/6942 திரு. சின்னக்குட்டி மாணிக்கம்
785 யா/சா/6986 திரு. கதிரேசு நாகநாதி
786 யா/சா/7001 திருமதி. பாரிப்பிள்ளை
செல்லத்துரை
787 யா/சா/7003 திருமதி. நாகரட்ணம் மார்க்கண்டு
788 யா/சா/7011 திருமதி. செல்லமுத்து சரவணமுத்து
789 யா/சா/7040 திரு. சுப்பையா கந்தையா
790 யா/சா/7059 திரு. செல்லையா கதிரவேலு
791 யா/சா/7068 திரு. மூர்த்தி மகேஸ்வரன்
792 யா/சா/7096 திருமதி. தங்கச்சியம்மா
துரைசிங்கம்
793 யா/சா/7101 திரு. தொமிங்குமுத்து கபிரியேல்
794 யா/சா/7104 திரு. கணபதிப்பிள்ளை
அருணாசலம்
795 யா/சா/7110 திருமதி. செசிலியம்மா பத்மநாதன்
796 யா/சா/7134 திருமதி. நாகம்மா இராமலிங்கம்
797 யா/சா/7138 திரு. தாமோதரம்பிள்ளை
சபாரத்தினம்
798 யா/சா/7142 திருமதி. செல்லாச்சி பண்டாரி
799 யா/சா/7143 திரு. தம்பிராசா சிங்கராசா
800 யா/சா/7164 திருமதி. இலட்சுமி காசிப்பிள்ளை
801 யா/சா/7176 திரு. சின்னையா செல்லத்துரை
802 யா/சா/7181 திரு. செல்லையா மாணிக்கம்
803 யா/சா/7182 திருமதி. சிவக்கொழுந்து
இராசசிங்கம்
804 யா/சா/7201 திரு.அன்னப்பிள்ளை தம்பிப்பிள்ளை
805 யா/சா/7213 திரு. இளையப்பா சட்டநாதர்
806 யா/சா/7225 திருமதி. ஜெயலட்சுமி பத்மநாதன்
பெணடிக்
807 யா/சா/7230 திரு. சோமசுந்தரம் அருளம்பலம்
808 யா/சா/7241 திருமதி. சிவபாக்கியம்
சுப்பிரமணியம்
809 யா/சா/7248 திருமதி. மகேஸ்வரி அரியநாயகம்
810 யா/சா/7257 திரு. நாகமுத்து தருமலிங்கம்
811 யா/சா/7259 திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்
812 யா/சா/7274 திருமதி. சேதுப்பிள்ளை செல்வம்
813 யா/சா/7278 திரு. ஐயம்பிள்ளை
சிதம்பரப்பிள்ளை
814 யா/சா/7280 திருமதி. சின்னம்மா கந்தன்
815 யா/சா/7294 திருமதி. சின்னம்மா கணபதி
816 யா/சா/7299 திருமதி. விசாலாட்சி இராமலிங்கம்
817 யா/சா/7305 திரு. முருகன் நாகன்
818 யா/சா/7309 திரு. முதலி இராமன்
819 யா/சா/7310 திரு. நமசிவாயம் சின்னத்துரை
820 யா/சா/731? திருமதி. வள்ளியம்மை சங்கரன
821 யா/சா/7313 திரு. வெள்ளையன் முருகேசு
822 யா/சா/7317 திரு. வேலாயுதம் கந்தையா
823 யா/சா/7325 திரு. ஆறுமுகத்தான் பொன்னன்
824 யா/சா/7349 திரு. வல்லி கட்டையன்
825 யா/சா/7352 திரு. சரவணை சின்னத்தம்பி
826 யா/சா/7364 திரு. முத்தையா கிருஸ்ணசாமி
827 யா/சா/7379 திருமதி. யோகரத்தினம்
சண்முகலிங்கம்
828 யா/சா/7382 திரு. ஆறுமுகம் கந்தையா
829 யா/சா/7389 திருமதி. முத்துப்பிள்ளை
சின்னத்தம்பி
830 யா/சா/7394 திருமதி. நாகமுத்து சுப்பிரமணியம்
831 யா/சா/7417 திருமதி. அன்னமுத்து வீரகத்தி
832 யா/சா/7419 திரு. வீரகத்தி முருகையா
833 யா/சா/7422 திரு. வேலாயுதர் கந்தசாமி
834 யா/சா/7434 திரு. சின்னப்பிள்ளை சங்கரன்
835 யா/சா/7440 திரு. சுப்பன் நாகன்
836 யா/சா/7442 திருமதி. அன்னபூரணம் கந்தையா
837 யா/சா/7449 திரு. ஐயாத்துரை கேதீஸ்வரன்
838 யா/சா/7450 திரு. கணபதி கதிரன்
839 யா/சா/7453 திரு. சின்னததம்பி சுப்பையா
840 யா/சா/7484 திருமதி. நாகி பொன்னன்
841 யா/சா/7495 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியம்
842 யா/சா/7496 திரு. முருகன் வெள்ளையன்
843 யா/சா/7497 திரு. கந்தர் சுப்பிரமணியம்
844 யா/சா/7508 திரு. சிதம்பரநாதன்
சிவசண்முகநாதன்
845 யா/சா/7517 திருமதி. சின்னப்பிள்ளை கந்தன்
846 யா/சா/7521 திரு. சங்கரன் சபாரத்தினம்
847 யா/சா/7533 திரு. கதிர்காமு சின்னத்தம்பி
848 யா/சா/7540 திரு. ஆறுமுகம் தம்பையா
849 யா/சா/7541 திரு. முருகன் சடையன்
850 யா/சா/7545 திரு. வல்லி முருகன்
851 யா/சா/7556 திரு. வல்லி கந்தையா
852 யா/சா/7562 திரு. நிலையினார் மனோகரன்
853 யா/சா/7567 திரு. கந்தையா சிவசம்பு
854 யா/சா/7576 திரு. சதாசிவம் பொன்னுத்துரை
855 யா/சா/7590 திருமதி. அன்னலட்சுமி கதிரவேலு
856 யா/சா/7596 திரு. பரமு தாமோதரம்பிள்ளை
857 யா/சா/7616 திரு. முருகன் வேலன்
858 யா/சா/7625 திரு. வல்லிபுரம் கதிரவேலு
859 யா/சா/7636 திருமதி. சின்னத்தங்கம்
அருணாசலம்
860 யா/சா/7645 திருமதி. தெய்வானை முருகேசு
861 யா/சா/7650 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
862 யா/சா/7661 திரு. வைரமுத்து பொன்னுத்துரை
863 யா/சா/7670 திரு. பாலன் மொறின் செல்லையா
864 யா/சா/7681 திரு. குமாரவேலு பாலசிங்கம்
865 யா/சா/7690 திரு. சின்னப்பொடியன் வல்லிபுரம்
866 யா/சா/7693 திருமதி. அன்னம்மா சிவகுரு
867 யா/சா/7720 திரு. அப்பாக்குட்டி சுப்பிரமணியம்
868 யா/சா/7725 திரு. பொன்னம்பலம் கனகசபை
869 யா/சா/7726 திருமதி. செல்லம்மா சிவகுரு
870 யா/சா/7730 திருமதி. வள்ளிப்பிள்ளை வேலன்
871 யா/சா/7735 திருமதி. சிவபூரணம் செல்லத்துரை
872 யா/சா/7752 திரு. வைத்திலிங்கம் நாகமுத்து
873 யா/சா/7763 திருமதி. செல்வநாயகி
சுப்பிரமணியம்
874 யா/சா/7771 திரு. ஆறுமுகம் மயில்வாகனம்
875 யா/சா/7774 திரு. ஆசைப்பிள்ளை இராசரத்தினம்
876 யா/சா/7777 திரு. நாகலிங்கம் தர்மேந்திரன்
877 யா/சா/7794 திரு. சுப்பையா சிவகுரு
878 யா/சா/7795 திரு. செல்வரத்தினம் இராசகோபால்
879 யா/சா/7799 திருமதி. பாக்கியம் முருகேசு
880 யா/சா/7805 திரு. இராஜகிருஸ்ணன்
தம்புஇராசையா
881 யா/சா/7817 திரு. வைத்தியலிங்கம் வாமதேவன்
882 யா/சா/7822 திருமதி. இரத்தினம் சின்னையா
883 யா/சா/7825 திரு. சின்னர் மாணிக்கம்
884 யா/சா/7830 திரு. பொன்னம்பலம் பரமசாமி
885 யா/சா/7832 திருமதி. சற்குணம் சுப்பையா
886 யா/சா/7838 திருமதி. சகுந்தலாதேவி பாலசிங்கம்
887யா/சா/7847 திரு. வேலன் கந்தையா
888 யா/சா/7854 திருமதி.ஜெயபாக்கியம் யோன்ராஜா
889 யா/சா/7859 திரு. இளையதம்பி நடராசா
890 யா/சா/7866 திரு. கந்தயா செல்லையா
891 யா/சா/7867 திரு. ஜோய்தேவசகாயம்
குணரத்தினம்
892 யா/சா/7869 திருமதி. நாகபூசணி சின்னத்தம்பி
893 யா/சா/7871 திருமதி. இராபூபதி கார்த்திகேசு
894 யா/சா/7873 திரு. சின்னப்பு பிள்ளையினார்
895 யா/சா/7879 திருமதி. சோதி தம்பு
896 யா/சா/7881 திரு. விசுவலிங்கம் கார்த்திகேசு
897 யா/சா/7902 திருமதி. அருளேஸ்வரி
பொன்னுத்துரை
898 யா/சா/7920 திரு. வேலன் சின்னத்தம்பி
899 யா/சா/7923 திரு. முத்து மயில்வ்ாகனம்
900 யா/சா/7938 திரு. சேனாதிராசா செல்வரத்தினம்
901 யா/சா/7969 திரு. செல்லத்துரை வேலாயுதர்
902 யா/சா/7982 திரு. சிதம்பரன் செல்லன்
903 யா/சா/7983 திருமதி. நல்லம்மா சின்னத்தம்பி
904 யா/சா/7993 திருமதி. தங்கம்மா சின்னத்தம்பி
905 யா/சா/8008 செல்வி. கனகம்மா தம்பையா
906 யா/சா/8014 திருமதி. மனோன்மணி மூத்ததம்பி
907 யா/சா/8023 திரு. வைரமுத்து கந்தையா
908 யா/சா/8030 திரு. காங்கேசு கார்த்திகேசு
909 யா/சா/8032 திரு. வீரவாகு குலசேகரம்
910 யா/சா/8039 திருமதி. சரஸ்வதி தம்பு
911 யா/சா/8054 திருமதி. பூரணம்மா நடராசா
912 யா/சா/8067 திரு. வல்லிபுரம் கிருஸ்ணசாமி
913 யா/சா/8080 திரு. வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை
914 யா/சா/8082 திருமதி. ஈஸ்வரி சுப்பிரமணியம்
915 யா/சா/8095 திரு. முத்தையா குமாரசாமி
916 யா/சா/8101 திரு. சுப்பிரமணியம் தங்கமணியம்
917 யா/சா/8102 திரு. இராமு சிதம்பரப்பிள்ளை
918 யா/சா/8109 திரு. கதிரன் சிவனடியான்
919 யா/சா/8114 திருமதி. அன்னலட்சுமி நடராசா
920 யா/சா/8127 திரு. சின்னவன் வேலுப்பிள்ளை
921 யா/சா/8129 திரு. சின்னையா செல்லையா
922 யா/சா/8132 திரு. கந்தன் நாகன்
923 யா/சா/8134 திரு. கணபதி நாகப்பன்
924 யா/சா/8139 திருமதி. உமையாத்தை தங்கராசா
925 யா/சா/8155 திரு. சுப்பன் சின்னத்தம்பி
926 யா/சா/8191 திரு. கணபதி வேலுப்பிள்ளை
927 யா/சா/8207 திருமதி. இளையபிள்ளை கந்தன்
928 யா/சா/8212 திருமதி. பூரணம் இராமசாமி
929 யா/சா/8220 திருமதி. இராசலட்சுமி நடராசா
930 யா/சா/8223 திருமதி. செல்லம்மா செல்லையா
931 யா/சா/8224 திரு. அப்பாக்குட்டி செல்லத்துரை
932 யா/சா/8257 திருமதி. தங்கம்மா வைரமுத்து
933 யா/சா/8264 திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்
934 யா/சா/8266 செல்வி. பூரணம் தம்பையா
935 யா/சா/8268 திருமதி. சோதிப்பிள்ளை
ஜயாத்துரை
936 யா/சா/8279 திரு. செல்லையா தம்பிப்பிள்ளை
937 யா/சா/8280 திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
938 யா/சா/8286 திருமதி. செல்லம்மா சதாசிவம்
939 யா/சா/8294 திரு.சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை
940 யா/சா/8305 திரு.மரியாம்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை
941 யா/சா/8314 திரு.கணபதிப்பிள்ளை இளையதம்பி
942 யா/சா/8332 திரு. செல்லப்பா விநாயகமூர்த்தி
943 யா/சா/8333 திரு.யோசெவ்ப் அந்தோனிப்பிள்ளை
944 யா/சா/8347 திரு.பொன்னையா கணபதிப்பிள்ளை
945 யா/சா/8350 திரு. கார்த்திகேசு செல்லையா
946 யா/சா/8353 திரு. தம்பையா காசிநாதர்
947 யா/சா/8356 திருமதி.மீனாட்சிப்பிள்ளை
செல்லப்பா
948 யா/சா/8371 திருமதி.மனோன்மணி பர்ணாண்டோ
949 யா/சா/8372 திருமதி. தெய்வானை கந்தையா
950 யா/சா/8408 திரு. வேலுப்பிள்ளை சோமசுந்தரம்
951 யா/சா/8459 திரு. சின்னத்தம்பி கந்தையா
952 யா/சா/8462 திரு. சுப்பையா சபாரத்தினம்
953 யா/சா/8469 திரு. பூதன் கிட்டிணன்
954 யா/சா/8482 திரு.சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியம்
955 யா/சா/8483 திரு. வைரமுத்து சின்னத்தம்பி
956 யா/சா/8487 திரு. பரமு தியாகராசப்பிள்ளை
957 யா/சா/8488 திரு. சீனிவாசகம் சிவபாதசுந்தரம்
958 யா/சா/8495 திருமதி. நாகம்மா சின்னத்துரை
959 யா/சா/8505 திரு.வீரகத்தியார்நடராசா சோமசுந்தரம்
960 யா/சா/8508 திரு. சுப்பிரமணியம் யோகசுந்தரம்
961 யா/சா/8510 திரு. கந்தசாசக்குருக்கள்
சச்சிதானந்தக்குருக்கள்
962 யா/சா/8516 திரு. நாகமுத்து சின்னத்துரை
963 யா/சா/8518 திரு. தம்பு தம்பிப்பிள்ளை
964 யா/சா/8519 திரு. கந்தர் வல்லிபுரம்
965 யா/சா/8521 திரு. நாகமுத்து கதிரவேலு
966 யா/சா/8530 திரு. வேலுப்பிள்ளை சரவணை
967 யா/சா/8543 திரு. கதிரவேலு திருநாவுக்கரசு
968 யா/சா/8554 திரு. மூத்ததம்பி பூதத்தம்பி
969 யா/சா/8566 திரு.வேலுப்பிள்ளை
கணபதிப்பிள்ளை
970 யா/சா/8571 திருமதி. செல்லம்மா கிட்டினன்
971 யா/சா/8581 திரு. கணபதிப்பிள்ளை
சுவாமிநாதன்
972 யா/சா/8585 திரு. கணபதி சுந்தரம்
973 யா/சா/8594 திரு. சின்னத்தம்பி கணபதி
974 யா/சா/8599 திருமதி. செல்லம்மா கந்தசாமி
975 யா/சா/8620 திரு. கணபதிப்பிள்ளை
தெய்வேந்திரம்
976 யா/சா/8622 திரு. வைத்திலிங்கம் கனகசுந்தரம்
977 யா/சா/8646 திரு. கென்றி பசுபதி
978 யா/சா/8664 திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை
979 யா/சா/8679 திரு. வாரித்தம்பி சிவஞானம்
980 யா/சா/8701 திருமதி. புவனேஸ்வரி
சுந்தரம்பிள்ளை
981 யா/சா/8704 திரு. செல்வநாயகம் கணேசலிங்கம்
982 யா/சா/8713 திருமதி. கண்மணி கனகரத்தினம்
983 யா/சா/8717 திரு. செல்லையா பூபாலசிங்கி
984 யா/சா/8720 திருமதி. சின்னம்மா கந்தையா
985 யா/சா/8725 திரு. கதிர்காமு கணபதிப்பிள்ளை
986 யா/சா/8730 திருமதி. தையல்முத்து
தில்லைநாதன்
987 யா/சா/8744 திரு. பொன்னையா பெரியதம்பி
988 யா/சா/8748 திருமதி. சிவக்கொழுந்து
நாகரத்தினம்

(தொடரும்)

# செவ்வாய் கிரக மணல் மேடுகளுக்கு அடியில் நீர் பனிக்கட்டியாக உள்ளமை கண்டுபிடிப்பு!

டப்ளின் —

செவ்வாய்க் கிரகத்தின் மணல் மேடுகளுக்கடியில் அதிகளவு தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானி மேரி புர்க் தெரிவித்துள்ளர்.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் வாழ்வதற்குத் தேவையான இயற்கைச் சூழ்நிலை நிலவுகிறதா என்பதை கண்டறிவதற்காக விண்கலங்கள் அனுப்பப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் அரிசோனா மாநிலம் டஸ்கனில் உள்ள கிரக அறிவியல் மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் மேரிபுர்க் இங்கிலாந்து சென்றார். அங்கு அவர் நிருபர்களிடம் கூறியதாவது-

செவ்வாய் கிரகத்தில் மண் மேடுகளுக்கு அடியில் பனிக்கட்டிகள் இருப்பதற்கான ஆதாரத்தை நான் கண்டுபிடித்துள்ளேன். இதன் மூலம், மனித இனம் அந்த கிரகத்தில் வாழ முடியும். செவ்வாய்க் கிரகத்தில் உள்ள சில ராட்சத மணல் மேடுகளின் கீழே 50 சதவீத தண்ணீர் இருப்பதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

இந்தக் கிரகத்தில் உள்ள மிகப்பெரிய மணல்மேடுகளில் ஒன்று 475 மீற்றர் உயரமும், 6.5 கிலோமீற்றர் அகலமும் உடையது. இந்த மணல் மேடுகள் சகாரா பாலை வனத்து மணல் மேடுகள் போல ஒத்த தன்மையுடையவை அல்ல. இந்த மணல் மேடுகள் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன் உருவானவை என அவர் தெரிவித்தார்.

## இந்திய,சீன நாடுகளிடையே

# உளவுத் துறை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம்!

புதுடெல்கி —

உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு குறித்த தகவல்களை பரிமாறிகொள்வதற்காக சீனாவுடன் இந்தியா ஒப்பந்தம் செய்யவுள்ளது. இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் ஐந்து நாள் பயணமாக நேற்று சீனா சென்றார். இந்தப் பயணத்தின் போது அவர் இது குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்.

பாதுகாப்புக்கான அமைச்சரவை குழுவின் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடந்தது. அப்போது இந்த ஒப்பந்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். சிவராஜ் பட்டேலை சீனா வரும்படி அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜியோ யாங்காங் அழைப்பு விடுத்திருந்தார். இதையடுத்து ஐந்து நாள் பயணமாக சிவராஜ் பட்டேல் நேற்று சீனா சென்றார்.

அரசு முறைப்பயணமாக சிவராஜ் பட்டேல் சீனா செல்வது இதுவே முதல் முறை. சீனாவில் தங்கியிருக்கும் போது அந்நாட்டு பிரதமர் வென் ஜியாபாவோவை அவர் சந்தித்துப்பேசவுள்ளார்.

# யாழ்.இந்து மாணவன் கணிதபாடத்தில்...

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

*கணிதபிரிவு*

சி.மயூரன் 3 ஏ (தேசிய நிலை 01), ந.பானு கோபன் 3ஏ (மாவட்டநிலை 2, தேசியநிலை 4), ச.தனேசன் 3ஏ (மாவட்டநிலை 3, தேசியநிலை 5),

*உயிரியல் பிரிவு*

பொ.சிவபாலன் 3 ஏ (மாவட்டநிலை 1, தேசிய நிலை 2), ம.விஷ்ணுகாந் 3ஏ

*வர்த்தகப் பிரிவு*

செ.சிவதர்சன் 3ஏ

வேம்படி மகளிர் கல்லூரி

*கணிதபிரிவு*

ஜனனி - பரமராஜா ஏ, 2பி (மாவட்டநிலை 46), சுரேகா - பத்மநாதன் ஏ,2பி ( மாவட்ட நிலை 47), காயத்திரி அருளானந்தம் 2ஏ,பி (மாவட்டநிலை 51).

*உயிரியல் பிரிவு*

மயூரதி சரவணபவானந்தன் 3ஏ (மாவட்ட நிலை 3), பவித்ரா சதானந்தசர்மா 2ஏ,பி (மாவட்டநிலை 6), மோரிநிரோசினி முத்துக் குமாரசாமி 3ஏ (மாவட்டநிலை 10), சாலினி பேரின்பநாதன் 2ஏ,பி (மாவட்டநிலை 14), ஜனகா பரமராஜா 3ஏ (மாவட்டநிலை 15), கேமஜா தங்கராஜா 2ஏ,பி(மாவட்டநிலை 17), தனுஜா மகேந்திரன் 2ஏ,பி (மாவட்டநிலை 20), உமானந்தினி முத்துராஜா 2ஏ,பி (மாவட்ட நிலை 24), சிவந்தினி பழனிவேற்பிள்ளை ஏ,2பி (மாவட்டநிலை 34).

*வர்த்தகம் - 3ஏ*

நொய்லின் ஜீவிதா பெனடிக்ற் (மாவட்ட நிலை 01), இந்துஷா அரியரட்ணம் (மாவட்ட நிலை 02), நீரஜா ஸ்ரீஸ்கந்தராசா (மாவட்ட நிலை 03), விக்னேஸ்வரி அம்பலவாணர் (மாவட்டநிலை 05), வினோதினி வேலாயுதம் பிள்ளை (மாவட்டநிலை 10), சுகன்யா ஸ்ரீ ஸ்கந்தராசா (மாவட்டநிலை 13), கௌசிகா ராஜசேகரம் (மாவட்டநிலை 14)

*2ஏ,பி*

தர்சினி கந்தசாமி, தர்சினி பாலேந்திரா, சர்மிளா செல்வநாயகம், சிந்துஜா வைத்தீஸ்வரன்.

*கலைப்பிரிவு*

பிரியா துரைரட்ணம் 2ஏ,பி, வினோதினி கனகம்பரம் 2ஏ,பி, இந்து சுந்தரமூர்த்தி ஏ,2பி.

யாழ்.கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி)

*கலைப்பிரிவு*

செல்வத்துரை மயூட்சன் 3ஏ

சென்.ஜோன்ஸ் கல்லூரி

*உயிரியல்பிரிவு*

தவபாலன் சேஷானந் 3ஏ

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

*கணித பிரிவு*

ஜானகிராம் 2ஏ,பி (மாவட்டநிலை 35), பா.டினேஸ் 2ஏ,சி (மாவட்டநிலை 22), பா.டிலீபன் ஏ,2பி (மாவட்டநிலை 27).

*வர்த்தகப்பிரிவு*

மு.சொரூபினி 3ஏ (மாவட்டநிலை 32), மு.மயூரா 2ஏ,பி (மாவட்டநிலை 21).

*கலைப்பிரிவு -3ஏ*

செ.சிவரூபன் (மாவட்டநிலை 2), கி.சிறீதரன் (மாவட்டநிலை 5), ம.மயூரி (மாவட்ட நிலை 18), செ.திருக்குமரன் (மாவட்டநிலை 27), த.மோகனவாணி (மாவட்டநிலை 58),

*2ஏ,பி*

றி.சுஜிந்தன் (மாவட்டநிலை 37), க.துவாரகினி, ச.நிஷாந்தி (மாவட்டநிலை 81), இ.தசரதன் (மாவட்டநிலை146), பா.பிரசாத் (மாவட்டநிலை 204), பா.எட்வேட் சுஜீவன் (மாவட்டநிலை502),

*2ஏ, எஸ்*

தே.டயானி (விழிப்புலனற்றவர்) (மாவட்ட நிலை 1244)

யாழ்.மத்தியகல்லூரி

*கலைப்பிரிவு*

தோமஸ் ஹென்றி பிரசாந்தன் 3ஏ, செல்வநாதன் திலக் 2ஏ,பி, சுப்பிரமணியம் பிரதீஸ் 2ஏ,சி, ஏ.எஸ்.சுரேந்திரன் ஏ,2பி, ரி.சுதாகரன் 2ஏ,பி.

*வர்த்தகப்பிரிவு*

எஸ்.வர்ணன் ஏ,2பி, கே.கஜேந்திரன் 2ஏ, சி,எஸ்.கம்சன் ஏ,2பி, என்.ரஜீவன் ஏ,2பி, ரி.நிஷாந்தன் ஏ,2பி, கே.தர்மகுமார் 3பி.

*கணிதப்பிரிவு*

எஸ்.மயூரன் 2ஏ,பி, எஸ்.தயாகரன் 2பி,சி,

*உயிரியல்பிரிவு*

என்.பிரதீபன் 3ஏ.

நேற்று வெளியாகியுள்ள கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த திலீப சந்துரூப என்ற மாணவரே உயிரியல் பாடத்தில் தேசிய ரீதியில் ஆகக் கூடுதலான புள்ளியைப் பெற்றுள்ளார்.

கலைத்துறையில் கண்டி மகாமாய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சத்துருக்க ஜீவனி என்ற மாணவியே தேசிய ரீதியில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

வர்த்தகத்துறையில் காலி மஹிந்த வித்தியாலய மாணவர் ஒருவர் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை நேற்று வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகளின்படி 1 லட்சத்து 16 ஆயிரத்து 506 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற தகுதி பெற்றிருக்கின்றனர். இது கடந்த வருடத்தைவிட 6000 பேரால் அதிகரித்திருப்பதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இந்தமுறை 2 லட்சத்து 4 ஆயிரத்து 30 பேர் பரீட்சைக்கு தோற்றினார்கள். 3 பாடங்களிலும் 2,910 பேர் ஏ சித்தி பெற்றிருக்கின்றனர்.

இந்த ஆண்டு 16,292 பேர் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். சென்ற ஆண்டு 14,850 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்துக்கான விண்ணப்ப படிவம் அடுத்த 13 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும்.

பெறுபேறுகள் மீளாய்வு செய்வதற்கு இந்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போர்நிறுத்த உடன்பாட்டை படைத்தரப்பு...

தொடர்ச்சியாக எமது போராளிகளை நாம் இழந்துகொண்டிருக்க முடியாது. எனவே, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரசியற் துறைப் போராளிகளை வெளியேறுமாறும், அனைத்துப் போராளிகளையும் எங்கள் நிர்வாகப் பகுதிக்குள் அழைத்துச் செல்லுமாறும் எங்கள் தேசியத் தலைவர் பணித்திருக்கிறார்.

தேசியத் தலைவரின் இந்தப் பணிப்பை எங்கள் போராளிகளுக்குத் தெரிவித்து, எமது நிர்வாகப் பிரதேசத்துக்குள் வரச்செய்துள்ளோம்.

இற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசுதான் ஏற்கவேண்டும்.

ஏனெனில், தமிழீழப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் எங்கள் அரசியற்துறைப் போராளிகள் பணிகளை மேற்கொள்ளலாம் என்பது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்கப்பட்ட விதிமுறை. இதற்கு முரணாக அரச படைத்தரப்பு யுத்தகாலம் போலவே எங்கள் போராளிகளை படுகொலை செய்து தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது.

இதனால், எங்கள் போராளிகளை அந்தப் பகுதியிலேயே இருக்கவைத்து இழப்புக்களைச் சந்திக்க அனுமதிக்கமுடியாது என்பதால், எமது போராளிகளை பாதுகாப்பதற்காக - பாதுகாப்பான பகுதிக்கு வருமாறு எங்கள் தலைவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

போர்நிறுத்த உடன்படிக்கை கூட இப்போது கேள்விக்குறியாகியிருக்கிறது. ஏனெனில், ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்த - அமுல்செய்யமுடியாத நிலையை இலங்கை படைத்தரப்பு தோற்றுவித்திருக்கிறது. இதனால், போர்நிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

இதுபற்றி இன்று நோர்வே தூது வருடனும் கண்காணிப்புக்குழுத் தலைவருடனும் தீவிரமாக விவாதிக்க இருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாடுகளை உறுதியாகத் தெரிவிக்க இருக்கின்றோம்.

இதையடுத்து எமது அடுத்த கட்ட நகர்வுகள் என்னவென்பதை வெளிப்படுத்த இயலும்.

கேள்வி : போராளிகளை மீளப் பெற்றுள்ளதென்பது போருக்கான தயாரிப்பா?

பதில் : இது போருக்கான தயாரிப்பு என்பதை விட போருக்கான தூண்டுதல். போர்ச் சூழலை உருவாக்கும் வகையில்தான் படைத்தரப்பின் நடவடிக்கைகள் எங்களுக்குத் தெரிகின்றது. ஏனெனில் நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டிய பின்பும் பலமுறை எங்களுக்கு உத்தரவாதம் அளித்த பின்பும் போராளிகள் கொல்லப்படுகின்ற நிகழ்வுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அரச படைத்தரப்பு ஆயுதக் குழுக்களை தங்களது படைமுகாம்களுக்குள்ளும் பாதுகாப்புக்குள்ளேயும் வைத்து அவர்களுடன் இணைந்துதான் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலைமையை நாங்கள் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. பொறுக்க முடியாது. பொறுத்துக்கொண்டிருக்கவும் முடியாது.

முதல் கட்ட நடவடிக்கையாகத்தான் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் எங்களுடைய போராளிகளை பாதுகாப்பாக எமது நிர்வாகப் பகுதிக்குள் வரவழைத்திருக்கின்றோம்.

அடுத்த கட்ட நிலைமைகளைப் பொறுத்துத்தான் அடுத்த கட்ட முடிவுகளை எமது தலைமைப்பீடம் எடுக்கும்.

கேள்வி : ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் 12 நிபந்தனைகளையும் ஜாதிக ஹெல உறுமயவின் 11 நிபந்தனைகளையும் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டது குறித்து...

பதில் : இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள்.

அதாவது, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய முன்வைத்திருக்கும் நிபந்தனைகள்தான் இப்போது நடைமுறையில் இருக்கின்றன.

ஏனெனில்,இந்தப் பொதுக்கட்டமைப்பு அமைதிப் பேச்சுவார்த்தை, போர்நிறுத்த அமுலாக்கம் உள்ளிட்ட நிபந்தனைகளாக அவர்கள்எதனையெல்லாம் வெளிப்படுத்தியிருக்கிறார்களோ அவ்வளவும் இப்போது நடைமுறையில் இருக்கிறது. அதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு அறிவித்தி ருக்கிறார்கள்.

இவர்கள் கூறும் இந்த நிபந்தனைகள் ஏற்கனவே நடைமுறையில் இருப்பதால்தான் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அமைதிப் பேச்சுக்கள் முடங்கிக் கிடக்கின்றன.

போர் நிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது. யுத்தம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவசரமான, மனிதாபிமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு மிகவும் மோசமான வாழ்நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தமிழ் மக்கள் விரக்தியும் சலிப்பும் அடைந்திருக்கின்றனர்.

இப்படியாக தற்போதுள்ள நடைமுறைச் சூழலைத்தான் நிபந்தனையாக்கி புதிதாக ஏதோ ஒன்றைச் சொல்ல வருவதைப் போலக் காட்டுகிறார்கள்.

சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்கப் போவதில்லை என்பதை இதன்மூலம் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியை, தீர்வை, தாங்களே பெற்றுக்கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த மாற்று வழியும் இல்லை என்பதை நோக்கியே சிங்கள தேசமும், சிங்கள தலைமைகளும் எங்களைத் தள்ளிக்கொண்டிருக்கின்றன என்பதற்கு முக்கிய வெளிப்பாடாக இது இருக்கிறது.

இதைச் சர்வதேச சமூகம் நிச்சயமாகக் கவனத்திலெடுக்குமென்றுதான் நம்புகிறோம்.

கேள்வி : போராளிகள் மீளப் பெறப்பட்டுள்ளமை தொடர்பாக மக்களின் மனநிலை என்னவாக இருக்கிறது?

பதில் : இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் - ஆயுதமற்ற நிலையில் போராளிகளை நீங்கள் இங்கு அனுப்புவது, நீங்களே அவர்களைக் கொல்வதற்காக இங்கே கொடுப்பது போல இருக்கிறது என்று எங்களிடத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

போராளிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொள்ளும் உறுதியான தீர்வைப் பெற்ற பிறகே அரசியல் பணிகளில் ஈடுபட போராளிகளை அனுப்புங்கள் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதன் அடிப்படையில்தான் நாங்கள் முடிவு மேற்கொண்டுள்ளோம்.

இன்று நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவினருடன் இது குறித்துப் பேசவுள்ளோம். அவர்களுடைய உத்தரவாதம் சாதகமாக அமையாவிட்டால் நிலைமைகள் மோசமடையும் என்றுதான் நினைக்கிறேன்.

கேள்வி : நோர்வே தரப்பை வெளியேற்றி விட்டு ஐ.நா.படையை அரசு அழைத் துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளனவே?

பதில் : தற்போது ஊடகங்களில்தான் இந்தச் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதன் உண்மைத் தன்மை என்னவென்பது குறித்து நாம் புரிந்து கொள்ளவியலாமல் இருக்கிறோம்.

இருந்தாலும், புதிய வெளிவிவகார அமைச்சரும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் இந்தக் கருத்தை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தற்போது நோர்வே தரப்பு மிகுந்த அர்ப்பணிப்போடு இந்தச் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையை வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் படைத்தரப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தால்தான் அனைத்துச் சமாதான முன்னெடுப்புக்களும், நகர்வுகளும் முடக்கமடைந்துள்ளதே தவிர அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் செயற்பாடுகளால் முடக்கமடைந்துவிட வில்லை.

இப்படிச் செயற்படுகிற படைத்தரப்பானது - ஐ.நா. படையைக் கொண்டுவரவேண்டுமென கோரிக்கை விடுவது முறையற்றது. காலம் காலமாக எங்களுக்கு ஒரு பட்டறிவு இருக்கிறது. இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் அதற்கு அனுசரணை வழங்குவது அல்லது மத்தியஸ்தம் செய்வது என்ற பொறுப்பில் இருப்பவர்களை சிங்கள பேரினவாதம் ஏற்றுக்கொண்டதில்லை.

உண்மையான, நீதியான தீர்வை நடுநிலையாளர்கள் உருவாக்கும் சூழ்நிலையின் போது, அல்லது அவர்கள் ஒரு கருத்தை முன்வைக்கின்றபோது, அது ஏதோ தமிழர்களுக்குச் சார்பாக முன்வைக்கப்படும் ஒரு முடிவாக ஒரு தோற்றத்தைக் காட்டி அவர்கள் மீது குற்றங்களைச் சுமத்தி அவர்களை வெளியேற்ற முயற்சி செய்வதென்பது இன்று நேற்றல்ல....

சிங்கள பேரினவாதம் காலம் காலமாக மேற்கொள்ளும் நடைமுறை இது தொடர்பில் எத்தனையோ பட்டறிவுகளும் அனுபவங்களும் எங்களுக்கு இருக்கிறது.

இப்போது நோர்வே தரப்புக்கும் இதே நிலை ஏற்பட்டுள்ளது. நாளை இன்னொருவர் மத்தியஸ்தர் பணி ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கும் இதே நிலமைதான் ஏற்படும். ஆகவே இந்தக் கோரிக்கை அர்த்தமற்றது.

சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவுடன் அனுசரணைப் பணியை நோர்வே முன்னெடுத்து வருகிறது.

ஆனால், அரசினுடைய - படைத்தரப்பினுடைய - சிங்களப் பேரினவாதத்தினுடைய தமிழர் விரோத நடவடிக்கைகள், போக்குகள் தான் சமாதானசூழலைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றன.

தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கும், தமது தமிழர் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களிலும் இருந்து தப்பித்துக் கொள்வதற்குமே இப்படியாக குழப்பகரமான கோரிக்கைகளையும் குற்றச்சாட்டுக்களையும் வைத்து குழப்பத்தை உருவாக்குவதுதான் இவர்களுடைய வலிமை. அதனுடைய வெளிப்பாடாகத்தான் இந்தக் கோரிக்கை வெளிப்பட்டிருக்கிறது.

ஆனால், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விஷேட தூதுவர் இப்போது இலங்கைக்கு வந்துள்ளார். அவர் கொழும்பில் பல்வேறு நேர்காணலை அளித்திருக்கிறார். அவர் நோர்வே தரப்பு வெளியேற்றப்படுவதை முற்றாக மறுத்துள்ளார்.

நோர்வே தரப்பை வெளியேற்றிவிட்டு ஐ.நா. தலையிடுவதென்பது சாத்தியமில்லை என்பதும் அதை ஐ.நா. எதிர்க்கவில்லையென்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆகவே, இதை நாங்கள் பெரிய செய்தியாகக் கருதவில்லை. சிங்களப் பேரினவாதிகள், சிங்கள பேரினவாத ஊடகங்கள் - தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு - தமிழ் மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு காலம்காலமாக செய்து வருவதன் வெளிப்பாடாகவே இதைப் பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான முயற்சிகளில் தமிழ்மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டனர்!

## ஐ.நா. பிரதிநிதியிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு —

**சமாதான முயற்சிகளில் தமிழ் மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே, தமிழ்மக் களின் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான விடயங்களில் சர்வதேச சமூகம் கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய காலகட்டம் வந்துவிட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி லக்டர் பிரஹமியிடம் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு எடுத்துக் கூறியுள்ளது.**

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவர் லக்டர் பிரஹமியை தமிழ்த் தேசிய கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மாலை கொழும்பு ஹில்டன் விடுதியில் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 50 ஆண்டு காலத்தில் 30 வருடங்கள் அப்போதைய தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக ரீதியாகவும், அஹிம்சை வழியிலும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினார்கள். ஆனால், அதற்கு அப்போதைய அரசாங்கங்கள் செவி சாய்க்கவில்லை மாறாக புறக்கணித்தன. வன் முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

இதனையடுத்தே ஆயுதப் போராட்டம் ஆரம் பிக்கப்பட்டது. 20 ஆண்டுகாலப் போரின்போது அரசாங்கம் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகாண முன்வரவில்லை. எவ்வாறாயினும் நோர்வேயின் அனுசரணையுடன் கடந்த மூன்றரை ஆண்டுகளாக போர்நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், மூன்றரை வருட காலமாகவும் தீர்வுக்குரிய வழிவகைகளை அரசாங்கம் முன் வைக்கவில்லை. தொடர்ந்தும் தமிழ்மக்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கிறது. அதனால்தான் இனிமேலும் சமாதானப் பேச்சுக்கள் நடை பெறும், தீர்வு வரும் என்ற நம்பிக்கைகள் எமக்கு இல்லாமற் போய்விட்டது.

தென்பகுதியில் தற்போது எழுந்துள்ள அரசி யல் நெருக்கடியால் சமாதானப் பேச்சுக்கான வாய்ப்புகள் மேலும் தாமதமடைந்து செல்கிறது.

இலங்கை அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை இனிமேலும் நாம் எதிர்பார்ப்பது அர்த்தமற்றது என்றே கருதுகின்றோம். எனவே, சர்வதேச சமூகம் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு தமிழர்களது சுயநிர்ணய உரிமை மற்றும் அது சம்பந்தமான விடயங்களில் கூடு தல் கவனம் எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் சிறப்புப் பிரதிநிதியிடம் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரஹமி - கூட்டமைப் பினர் கூறிய விடயங்கள் தொடர்பாக உரிய முறையில் பரிசீலிப்பதாகவும் கடந்தகால நிகழ்வுகளை வெளிப்படையாகத் தெரிவித்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

# மஹிந்த ஜனாதிபதியானால் நாடு நிச்சயம் பிளவுபடும்!

## கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு —

ஜே.வி.பி - ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் - இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவது நிச்சயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒற்றையாட்சியின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை மஹிந்த ராஜபக்ஷ நன்கு தெரிந்திருந்த போதும், மேற்படி இரு கட்சியினதும் நிலைப்பாடுகளை அவர் ஏற்றிருப்பதானது அவரின் குறுகிய அரசியல் நோக்கங்களை காட்டுகிறது.

இந்த இனவாத கட்சிகளின் கூட்டமைப்புடன் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்று ஜனாதிபதியானால் - தமிழீழம் அமைப்பதற்கான எமது பாதை மிக இலகுவாகிவிடும். அது மட்டுமன்றி அவரின் புதிய கூட்டணியால் ஏமாறப்போவது சிங்கள மக்கள் தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச கட்டுப்பாட்டு பகுதியில் கருணா குழுவினர் நடமாட்டம்

## கண்காணிப்புக் குழு உறுதி செய்துள்ளது

கொழும்பு —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச மொன்றில் கருணா குழுவைச் சேர்ந்த சிலரை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தற்செயலாகச் சந்தித்ததாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலெவ்ஸ் டோட்ரயர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு - பொலனறுவ வீதியில் - கருணா குழுவின் நடமாட்டம் இருப்பதாக கூறப்படும் கிராமமொன்றிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் வழக்கமான ரோந்தில் ஈடுபட்டிருந்தபோது குறிப்பிட்ட இடமொன்றில் வாகனத்தை நிறுத்தியபோது கருணா அணியினர் சிலர் அவர்களுடன் பேசினர்.

இது ஒரு திட்டமிட்ட சந்திப்பு அல்ல. தற்செயலான தொரு சந்திப்பே. இதுபோன்ற சந்திப்புகள் மேற்கொள்ளும் திட்டம் எதுவும் கண்காணிப்புக் குழுவிடம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழுவினரோ வேறு ஆயுதக் குழுவினரோ இயங்கவில்லையென இலங்கை அரசு கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

# நிபந்தனைகளை ஏற்க வேண்டுமென மஹிந்தவுக்கு ஹெல உறுமய மிரட்டல்!

ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள நிபந்தனைகளில் இரண்டு மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற வேண்டியது கட்டாயம் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் -

எங்கள் கட்சி முன்வைத்த நிபந்தனைகளில் இரு முக்கிய நிபந்தனைகளான ஐக்கிய இலங்கை என்ற வகையில் நாட்டை பிரிக்காது செயற்படல். மற்றும் சமஷ்டித்தீர்வை கைவிடல் என்பவற்றுக்கு பிரதமர் கண்டிப்பாக இணங்க வேண்டும். இவ்விரு விடயங்களும் அவரின் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

பிரதமர் இதனை கருத்தில் கொள்ளாது செயற்படுவாராயின் அவருக்கான ஆதரவை திரும்பப் பெற்று தனியான ஒரு வேட்பாளரை நிறுத்தவுள்ளதாகவும் ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார்.

# ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் அனுருத்த ரத்வத்த கைது!

கொழும்பு —

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று லஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோதமான முறையில் 4 கோடி 15 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை ரத்வத்த சம்பாதித்துள்ளார் என்று லஞ்ச ஊழல் ஆணைக் குழு குற்றம்சுமத்தியுள்ளது.

இவரை ரூபா 25 ஆயிரம் ரொக்கம் மற்றும் ரூபா 3 லட்சம் சரீரப் பிணையில் செல்வதற்கான அனுமதியை கொழும்பு மேலதிக நீதிபதி அஜித் அனவர்தனா வழங்கினார்.

சட்டவிரோத ஆயுதங்கள் , போதைப் பொருட்கள், தங்கம் மற்றும் பணம் ஆகியவற்றைப் பதுக்கி வைத்திருப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து, நீதிமன்ற அனுமதி பெற்று ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோரது வங்கிப் பெட்டகங்கள் சோதனையிடப்பட்டதாகவும் -அதனடிப்படையில் 4 கோடியே 21 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியுடைய 80 சேமிப்பு வைப்புச் சான்றிதழ்கள் அங்கு கண்டுபிடிக்கபட்டுள்ளதாவும் ஆணைக்குழு நீதிமன்றுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

1997 மார்ச் 1 முதல் 2002 ஓகஸ்ட் 31 வரையிலான காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மேலதிக வருமானமாக இவர் சம்பாதித்துள்ளார்

இது தொடர்பாக அவர் சமர்ப்பித்த விளக்கம் ஏற்கமுடியாது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஐ.நா தூதுவருடன் ரணில் சந்திப்பு!

கொழும்பு

இலங்கைக்கு வருகைதந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் லக்டார் பிராக்மியை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

கொழும்பிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கை இனப் பிரச்சினைக்கான சமாதானச் செயற்பாடுகள் குறித்தும் இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் ஐ.நா.தூதுவரிடம் ரணில் விக்கிரமசிங்க விளக்கினார் என்று ஐ.தே.க. தலைமைச் செய்திகள் தெரிவித்தன.

## நோர்வே...

யின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ஆகியோர் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படுமெனத் தெரிய வருகிறது.

## அனுசரணையாளர் பாத்திர...

நாயகம் கோபி அனானிடம் உதவி கேட்டதற்கமைய இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடவே நான் இங்கு வந்துள்ளேன்.

எனவே, இதில் மாற்றுக்கருத்துக்கு எவ்வித இடமுமில்லை. நாம் நோர்வேயை விலக்கிவிட்டு எவ்வித அனுசரணையாளர் பதவியையும் வகிக்கமாட்டோம். நோர்வேயின் செயற்பாட்டில் நாம் பூரண திருப்தியடைகிறோம்.

இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று ஏற்படுவதற்கு எமது முழுமையான ஆதரவுள்ளது. எனினும், சமாதானப் பேச்சுக்கள் நீண்ட காலமாக ஆரம்பிக்கப்படாமல் உள்ளமை வேதனையளிக்கும் விடயம்.

இங்குள்ள அரசியற் கட்சிகளுடன் பேச்சுக் களைநடத்தியுள்ளேன். இந்தப் பேச்சுக்கள் - மனித உரிமை மற்றும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அமைந்ததெனத் தெரிவித்த அவர் - மேலதிக விபரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## ராணுவ...

ஆறு பேர் காயமுற்றனர்.

அத்துடன் - வவுனியா, மன்னார் அரசியற்துறை அலுவலகங்களும் தாக்கப்பட்டன. நிராயுதபாணிகளான அரசியற் போராளிகளை கடத்திச் செல்லவும் இராணுவ புலனாய்வுத் துறையினரும் ஆயுதக்குழுவினரும் திட்டமிட்டிருந்த நிலையிலேயே -

தமிழீழத் தேசியத் தலைவர் - அனைத்து அரசியற்துறைப் போராளிகளையும் புலிகளின் பிரதேசங்களுக்குத் திரும்புமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து நேற்று அரசியற்துறைப் போராளிகள் அனைவரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படையினரின் துப்பாக்கி....

இந்தச் சம்பவத்தில் சுவர்ணசிறி (வயது 27) என்ற இராணுவ கோப்ரல் படுகாயமடைந்ததுடன் மேலும் 3 பொலிஸார் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட இளைஞர்தான் கைக்குண்டை வீசியவர் என்றும் - இவரிடமிருந்து மைக்ரோ ரக கைத் துப்பாக்கியும், வெடிக்காத கைக்குண்டொன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் வந்த மற்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸாரும், இராணுவத்தினரும் பரவலாக மேற்கொண்ட கண்மூடித்தமான துப்பாக்கி வேட்டுக்களால் சுமார் 15 நிமிடங்கள்வரை அந்தப் பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

இதேவேளை நேற்று பிற்பகல் 1 மணியளவில் கல்லடிப் பாலத்திலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது கைக்குண்டு வீசப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ரஞ்சித்குமார குலசிங்க (வயது 42) என்ற பொலிஸ் கொன்ஸ்டபிள் படுகாயமடைந்தார்.

## படையினரின்...

இரவு கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியோடிய போதே இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாக படையினர் தெரிவித்தனர்.

இரு இளைஞர்களும் சைக்கிளில் வந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் இருவரையும் கைது செய்துள்ளதாகவும் கூறிய படையினர் - இரு இளைஞர்களும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் திருகோணமலையைச் சேர்ந்த அம்பலம் சிவஞானசுந்தரம், குருமூர்த்தி சரத்குமார் எனத் தெரியவருகிறது.

## யாழ்.நகரில்....

சென்றுகொண்டிருந்தபோது லொறி ஒன்று சைக்கிளில் சென்றவரை மோதியது. இந்த விபத்தில் சைக்கிளில் சென்றவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்கு இராணுவத்தினருடன் வந்த பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். இது தொடர்பாக யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விபத்து நடைபெற்ற இடத்தை யும், வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தையும் பார்வையிட்டார். அத்துடன் விசா ரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

## கட்டுநாயக்க...

நோர்வே அரசு, இரு தரப்புச் சந்திப்புக்குப் பொருத்தமான இடமாக கட்டு நாயக்க விமான நிலையத்தைத் தெரிவுசெய்தது.

இலங்கை அரசு இங்கு பேச்சு நடத்த இணங்கியுள்ளது. வெளிநாட்டில் பேச்சுநடத்த புலிகளும் கட்டு நாயக்க ஊடாக பயணம் செய்ய வேண்டுமென்பதால் இங்கு பேச்சு நடத்துவதற்கு புலிகள் இணக்கம் தெரிவிப்பார்கள் என நம்பப்படுகிறது.

நோர்வே அரசு விரைவில் இந்தப் பேச்சுக்கான அறிவிப்பை இரு தரப்புக்கும் விடுக்கவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியரான திரு த.நவச்சந்திரன்
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி. பூரணம் தங்கராசா**

(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து, மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாருக்கும் மற்றும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

சக ஊழியர்கள்,
வெண்புறா செயற்கை உறுப்பு
தொழில்நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(C/4571)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.